பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 18 வியாழக்கிழமை (03.09.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 259

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் உட்பட

## 14 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)
இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நாட்டில் பல மாவட்டங்களுக்கு இன்று நள்ளிரவு வரை சிவபபு எச்சரிக்கை விடுக்கப்பட் 23

மிகவும் வலுவான நிலையில் இருந்தே

## விடுதலைப் புலிகள் நேர்மையாக சமாதான முயற்சியை முன்னெடுத்தனர்

### கொழும்பு ஊடகத்துக்கு எரிக் சொல்ஹெய்ம்



(ஒஸ்லோ)
மிகவும் வலுவான நிலையில் இருந்தே விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். அத்துடன் சமாதான முயற்சிகளிலும் அவர்கள் நேர்மையாக இருந்தனர்.
ஆனால் சமாதான காலத்தில் இலங்கை இராணுவமே தன்னை பலப் 02

# 20வது திருத்தச் சட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி

## வரைபினை வர்த்தமானியில் வெளியிடவும் அங்கீகாரம்

(கொழும்பு)

**அரசியலமைப்பின் 20ஆவது சட்டமூல வரைபுக்கு அமைச்சரவை அனுமதித்துள்ளது. மேலும் வரைபினை வர்த்தமானியில் வெளியிடவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

**19ஆவது திருத்தத்தில் பிரதான விடயங்களாகக் காணப்பட்ட ஜனாதிபதியின் பதவிக் காலம், பாராளுமன்றத்தின் பதவிக்காலம் மற்றும் தகவலறியும் உரிமைச் சட்டம், ஜனாதிபதி பதவி வகிக்கும் தடவைகள் ஆகியவை தவிர்த்து ஏனைய விடயங்கள் அனைத்தையும் நீக்கவும் அனுமதி வழங்கப் பட்டுள்ளது.**

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கான மூல வரைபு நீதியமைச்சரினால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற அமைச்சரவையில் சமர்ப்பிக்கப் பட்டது.
சட்டமூல வரைபிற்கு அமைச்சரவை ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியுள்ளது. அமைச்சரவையில் அங்கீகாரம் பெற்ற சட்டமூல வரைபினை வர்த்தமானியில் வெளியிடவும் தீர்மானிக்கப்பட்டது.
அரசியலமைப்பின் 23

மேலும் 9 பேருக்கு

## கொரோனா தொற்று உறுதி

(கொழும்பு)
இலங்கையில் நேற்று மட்டும் 9 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட் 23

## என்னால் வழங்கப்பட்ட நியமனங்களை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது



### ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)
என்னால் வழங்கப்பட்ட நியமனங்களை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
அமைச்சரவை, அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட நியமனங்கள் தொடர்பில் பல்வேறு தரப்பாலும் முன்வைக்கப்பட்ட அழுத்தம்தொடர்பிலேயே ஜனாதிபதி 23

## 90.8 மில்லி மீற்றர் மழை யாழ்.மாவட்டத்தில் பதிவு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 90.8 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக திருநெல்வேலியில் அமைந்துள்ள பிராந்திய வளிமண்டலவியல் ஆராய்ச்சி திணைக்கள பொறுப்பதிகாரி த.பிர 23

20ஆவது திருத்தத்துக்கு

## வாக்கெடுப்பு அவசியமில்லை

சட்டமா அதிபர்

03ஆம் பக்கம் பார்க்க

## பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி வகிக்க முடியாது

### அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்



(கொழும்பு)
முப்படைகளின் தளபதி என்ற வகையில் நாட்டின் பாதுகாப்புக்கு பொறுப்புக் கூற வேண்டியவரான ஜனாதிபதி பாதுகாப்பு 23

## ஒரு இலட்சம் வேலைவாய்ப்பில் வடக்கு, கிழக்கு புறக்கணிக்கப்படாது

### ஜனாதிபதி கோட்டா மற்றும் பிரதமர் மகிந்த அமைச்சர் டக்ளஸிடம் உறுதி

(கொழும்பு)
ஒரு இலட்சம் வேலைவாய்ப்பில் வடக்கு-கிழக்கு புறக்கணிக்கப்பட மாட்டாது என்றும் குறித்த பிரதேசங்களுக்கான ஒதுக்கீடு உரிய முறை 02

50 ஆயிரத்து 177 பட்டதாரிகள்

## அரச சேவையில் நேற்று இணைத்துக் கொள்ளப்பட்டனர்

(கொழும்பு)
50 ஆயிரத்து 177 பட்டதாரிகள் நேற்று அரச சேவையில் இணைத் 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மக்கள் பயன்படுத்தி வரும் சிக்கலற்ற காணிகளுக்கு மூன்று மாத காலத்திற்குள் காணி உறுதிப்பத்திரம்

## அதிகாரிகளுக்கு ஜனாதிபதி கோட்டா பணிப்புரை



- காணிக் கொள்கை சீர்திருத்தப்படும்.
- காணி அபிவிருத்தியின் பின்னர் வேறு ஒருவருக்கு கைமாற்ற முடியாது.
- பயன்படுத்தப்படாத LRC காணிகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை.
- இளைஞர் தொழில் முயற்சியாளர்களுக்கு காணிகள்.

மக்கள் பயன்படுத்தி வருகின்ற சிக்கலற்ற காணிகளுக்கு மூன்று மாத காலத்திற்குள் காணி உறுதிப் பத்திரங்களை வழங்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

பல்வேறு மாவட்டங்களுக்கு விஜயம் மேற்கொண்டபோது காணி உறுதிப் பத்திரம் இல்லாமையே மக்கள் முன் வைத்த மிக முக்கிய பிரச்சினை என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பரம்பரையாக வாழ்ந்து வந்தாலும், பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்டிருந்தாலும் உறுதிப்பத்திரம் இல்லாமையினால் அவர்கள் பல்வேறு சிக்கல்களுக்கு உட்பட்டிருப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நாட்டுக்கும் பொருளாதார கொள்கைக்கும் பொருத்தமான வகையில் அமைந்த காணிக் கொள்கை மறுசீரமைக்கப்பட வேண்டுமென்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற காணி முகாமைத்துவ அலுவல்கள், அரச வியாபார காணிகள் மற்றும் சொத்துக்கள், அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

காணி உறுதிப்பத்திரம் இல்லாமையினால் மக்கள் பாரிய சிக்கல்களுக்கு உட்பட்டுள்ளதுடன், அபிவிருத்தியும் பாரிய பின்னடைவு கண்டுள்ளது. விவசாய பொருளாதார பொறிமுறை ஒன்றை கட்டியெழுப்பும் போது காணி பயன்பாட்டுக் கொள்கை மிக முக்கியம் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

குத்தகைக்கு விடப்பட்டுள்ள காணிகளை அபிவிருத்தி செய்ததன் பின்னர் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு அல்லது காணி உரித்துடைய நிறுவனம் அல்லது வேறு தரப்பினருக்கு பொறுப்பளித்தல் விவசாயிகள் முகங்கொடுத்துள்ள மேலும் ஒரு சிக்கலாகும். அவ்வாறான நிலைமைகள் ஏற்படுவதற்கு இடமளிக்க வேண்டாமென்று ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு உரித்துடைய பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தப்படாத காணிகளை பொருத்தமான பயிர்ச் செய்கைக்காக பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி இளைஞர் தொழில் முயற்சியாளர்களுக்கு அவற்றை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பை பெற்றுக்கொள்ள முடியுமெனவும் குறிப்பிட்டார்.

பல்வேறு அரசாங்கங்களின் கீழ் ஜனாதிபதிகள் மக்களுக்கு காணி உறுதிப் பத்திரங்களை வழங்கினார்கள். ஆனாலும் பிற்பட்ட காலங்களில் வங்கிக்கடன் அல்லது பொருளாதார அலகாக அக்காணிகளை ஆக்கிக்கொள்வதில் பல்வேறு பிரச்சினைகளுக்கு மக்கள் முகங்கொடுத்து வருவதாக பொருளாதார புத்தெழுச்சி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ குறிப்பிட்டார். (ம-03)

## ஒரு இலட்சம்...

யில் விரைவில் வழங்கி வைக்கப்படும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ச ஆகியோர் உறுதியளித்துள்ளனர்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று (02) இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் குறித்த விடயம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் பிரஸ்தாபிக்கப்பட்ட நிலையிலேயே ஜனாதிபதி மற்றும் பிரதமரினால் குறித்த உறுதி மொழி வழங்கி வைக்கப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் வாக்குறுதிக்கமைய நாடளாவிய ரீதியில் வறிய குடும்பங்களுக்கு ஒரு இலட்சம் அரசாங்க வேலை வாய்ப்பினை பெற்றுக்கு கொடுக்கும் செயற்றிட்டம் வடக்கு கிழக்கு தவிர்ந்த நாட்டின் ஏனைய பிரதேசங்களில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (ம-03)


கார், வான் குத்தகைக்கு தேவை

கார்கள், வான்கள்
மாதாந்த குத்தகைக்கு சாரதி
இல்லாமல் தேவை.

தொடர்பு (3772)
075 090 6486

விற்பனைக்கு

நல்ல இனத்தைச் சேர்ந்த பால் கறக்கக்கூடிய பசு, கன்றுக் குட்டி, இரண்டு நாம்பன் கன்றுக் குட்டிகள் மற்றும் நல்லின கடா ஆடு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு (3773)
077 203 0309, 077 818 5017


## விடுதலைப் புலி...

படுத்தியது.

இவ்வாறு நோர்வேயின் முன்னாள் விசேட சமாதான தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அதில் அவர் குறிப்பிட்ட முக்கிய விடயங்கள் வருமாறு.

விடுதலைப்புலிகள் மிகவும் வலுவான நிலையிலிருந்த வேளையே பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார்கள் என்பதை தயவு செய்து நினைவுபடுத்திக்கொள்ளுங்கள்.

2000-2001 போன்று விடுதலைப் புலிகள் முன்னர் ஒருபோதும் வலுவாக இருந்ததில்லை பின்னரும் வலுவாக இருந்ததில்லை. அவர்கள் ஆனையிறவை கைப்பற்றியிருந்தார்கள்.

அவர்கள் யாழ். குடாநாட்டை கைப்பற்றும் நிலையிலிருந்தார்கள். இலங்கை அரசாங்கத்துக்கு பாகிஸ்தான் வழங்கிய உதவி காரணமாகவே அவர்கள் இறுதி நிமிடத்தில் தோற்கடிக்கப்பட்டார்கள்.

பண்டாரநாயக்க விமானநிலையத்தின் மீதான தாக்குதல் மூலம் அவர்கள் இலங்கையின் பொருளாதாரத்தை அழித்திருந்தார்கள்.

ஆகவே அவர்கள் மிகவும் வலுவான நிலையிலிருந்த தருணத்திலேயே சமாதான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தனர்.

எனவே அவர்கள் சமாதான முயற்சிகளில் மிகவும் நேர்மையாகயிருந்தனர் என்பதை வெளிப்படுத்தியது.

ஆனால் அவர்கள் சமஷ்டி தீர்வு வரை செல்வதற்கு தயாராகயிருந்தார்களா என கேள்வி எழக்கூடும்.

பிரபாகரன் சமாதானத்தை விரும்பினார். அவர் சமாதானத்துக்கு தயாராக இருந்தார். ஆனால் நிறையவிட்டுக் கொடுப்புகளை செய்யவேண்டியிருந்தது.

சமாதான முயற்சிகள் இடம்பெற்ற வேளை இலங்கை இராணுவமே அதிகளவில் தன்னை பலப்படுத்தியது.

2007 முதல் 2009 வரை இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் போது நாங்கள் இதனை உணர்ந்தோம்.

உலகின் அனைத்து நாடுகளினதும் ஆதரவும் இலங்கைக்கு கிடைத்தது. இந்தியா, அமெரிக்கா, சீனா, ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் இலங்கைக்கு ஆதரவளித்தன.

அவர்கள் அனைவரும் சமாதானத்தை விரும்பினார்கள். அதேவேளை அவர்கள் விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் ஒரு தரப்பை தெரிவு செய்ய விரும்பினார்கள். அவர்கள் இலங்கை அரசாங்கத்தை தெரிவு செய்தனர்.

ஆகவே இலங்கை அரசாங்கமே தனது நிலையை பலப்படுத்தியது. விடுதலைப்புலிகள் இல்லை.

மகிந்த ராஜபக்ச நீண்டகால பேச்சுவார்த்தைகளை விரும்பவில்லை.

2006 இல் நாங்கள் எதிர்பார்த்ததை விட நிலைமை வேறு மாதிரியாக காணப்பட்டது அதுவே சமாதானத்துக்கான இறுதி சந்தர்ப்பம் தவறவிடப்பட்ட சந்தர்ப்பம் என நான் கருதுகின்றேன் என மேலும் அவர் தெரிவித்தார். (ம-03)


சேவைநலன் பாராட்டும் பிரியாவிடையும்



உயர்திரு
சித்திரவேலு குருகுலலிங்கம்
ஆசிரிய சேவை :- 21.10.1988 - 03.08.2000
அதிபர் சேவை
04.08.2000 - 09.02.2020



திரு
கணபதிப்பிள்ளை
சுப்பிரமணியம்
ஆசிரிய சேவை :- 29.03.1990 - 05.10.2002
கடமை நிறைவேற்று அதிபராக
07.10.2002 - 25.11.2018



திரு
சுப்பிரமணியம்
ஜெயானந்தகுமார்
ஆசிரிய சேவை:- 20.01.1989 - 05.05.2009
அதிபர் சேவை
05.05.2009 - 24.09.2019

நீண்டகாலம் வடமராட்சி கல்வி வலயத்தில் சேவையாற்றி இவ்வருடம் ஓய்வுபெற்றுச் சென்றுள்ள அதிபர்களாகிய உங்களை மறவாது உள்ளன்போடு, தங்களின் ஓய்வுக்காலம் நிறைவாகவும் சிறப்பாகவும் அமையும் வண்ணம் வாழ்த்துகிறோம்.

அதிபர் சங்கம், பருத்தித்துறை கோட்டம்.

(C-227)

# 20 ஆவது திருத்தச் சட்டம்

# பொதுஜன வாக்கெடுப்பின்றி நிறைவேற்ற முடியும்

## சட்டமா அதிபர் அறிவிப்பு



**(கொழும்பு)**

**20ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை பொதுஜன வாக்கெடுப்பின்றி பாராளுமன்றில் நிறைவேற்ற முடியும் என சட்டமா அதிபர் நீதியமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளார்.**

அரசியலமைப்பில் முன்மொழியப்பட்ட 20ஆவது அரசியலமைப்புத் திருத்தம் குறித்த வரைபு சட்டமா அதிபரின் மீளாய்வுக்காக அனுப்பப்பட்டதாக நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த வரைவு நீதியமைச்சின் செயலாளர் ஊடாக தமக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக சட்டமா அதிபரின் இணைப் பதிகாரி நிஷாரா ஜயரத்ன குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், 20ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை பொதுஜன வாக்கெடுப்பின்றி மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பாராளுமன்றில் நிறைவேற்றலாம் என சட்டமா அதிபரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 19ஆவது திருத்தத்தை நீக்கி 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை கொண்டுவரும் அமைச்சரவைப் பத்திரம் நேற்று அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, செப்டெம்பரில் இரண்டாம் பாராளுமன்ற அமர்வு வாரத்தில் 20 ஆவது திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, ஒக்டோபர் இறுதிக்குள் அதனை நிறைவேற்றவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.


இதற்கமைய, எதிர்வரும் நவம்பரில் அரசாங்கம் கொண்டுவரவுள்ள அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்திற்கு முன்னர் 20ஆவது திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையைப் பலவீனப்படுத்தியுள்ள 19 ஆவது திருத்தச் சட்டத்தை உடனடியாக நீக்குவதற்கு அரசாங்கம் தீவிரம் காட்டி வரும் நிலையில், இந்தத் திருத்தச் சட்டத்தை இல்லாது செய்ய இடமளிக்கப் போவதில்லை என எதிர்த் தரப்பினர் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-7)

## பிளவுபடாத இலங்கைக்குள்

# புலிகள் ஆட்சி செய்வதை விரும்பிய மகிந்த

## - எரிக் சொல்ஹெய்ம் -



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் வடக்கில் ஆட்சி செய்வதை அனுமதிப்பதற்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தயாராக இருந்தார் என நோர்வேயின் முன்னாள் விசேட சமாதான பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றுக் கொண்டிருந்தவேளை விடுதலைப் புலிகளின் தலைவருடன் சந்திப்பொன்றை மேற்கொள்ள பிரதமர் மகிந்த ராஜபக்ஷ விருப்பம் வெளியிட்டார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரபாகரனுடன் மாநாடொன்றை நடத்துவதற்கு விருப்பம் கொண்டுள்ளதாக தன்னிடம் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்ததாகவும் பிளவுபடாத இலங்கைக்குள் விடுதலைப் புலிகள் வடக்கில் ஆட்சி செய்வதை அனுமதிப்பதற்கு தான் தயார் என மகிந்த தன்னிடம் கூறியதாகவும் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இறுதி யுத்தத்தின்போது கப்பல்கள் மூலம் பொதுமக்களை வெளியேற்ற நோர்வே முன்வந்தது எனக் குறிப்பிட்டுள்ள சொல்ஹெய்ம், அனைத்து பொதுமக்களையும் விடுதலைப் புலிகளையும் பதிவு செய்ய வேண்டும் என தாங்கள் வேண்டுகோள் விடுத்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அந்தப் பெயர்களை கொண்டவர்களை கண்டுபிடித்து கப்பல் மூலம் தென்பகுதிக்கு கொண்டு செல்வதற்கான வேண்டுகோளை தாம் முன்வைத்தபோதிலும் பிரபாகரன் அதனை நிராகரித்துவிட்டார் எனவும் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார். (2-7)

# திருத்தச் சட்டங்களில் உள்ள நல்ல விடயங்கள்

# புதிய அரசியலமைப்பிலும் பாதுகாக்கப்பட வேண்டும்

(கொழும்பு)

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தில் சில நல்ல விடயங்கள் உள்ளன. புதிய அரசியலமைப்பிலும் அவை பாதுகாக்கப்பட வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

பதுளையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில், அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டத்திலுள்ள குறைகளை நிவர்த்தி செய்வதற்காக 20ஆவது திருத்தச் சட்ட மூலம் கொண்டு வரப்படும் என உறுதியளிக்கப்பட்டது.

அந்த உறுதிமொழி நிறைவேறப்போகின்றது. 19 இல் சில நல்ல விடயங்கள் உள்ளன. அவை பாதுகாக்கப்பட வேண்டும். அதேபோல் 13ஆவது திருத்தச்சட்டத்திலும் நல்ல விடயங்கள் உள்ளன.



எனவே, புதிய அரசியலமைப்பை இயற்றும்போது மேற்படி சரத்துகளில் உள்ள நல்ல விடயங்களை உள்வாங்க வேண்டும். அவ்வாறு உள்வாங்கி புதிய அரசியலமைப்பை உருவாக்கினால்தான் அது சிறப்பாக இருக்கும்.

விருப்பு வாக்கு இல்லாமல் புதிய முறையில் தேர்தல் நடத்தப்படும் என உறுதிமொழி வழங்கப்பட்டதாலேயே 19 இற்கு ஆதரவாக அன்று வாக்களித்தோம். இறுதியில் மைத்திரியும், ரணிலும் எம்மை ஏமாற்றினார்கள். உறுதிமொழியை மீறினார்கள்.

ஜனாதிபதியின் பதவிக் காலம் 5 ஆண்டுகள், இரு தடவைகள் மாத்திரமே பதவி வகிக்கலாம், சுயாதீன ஆணைக் குழுக்கள், தகவல் அறியும் உரிமை என்பன சிறப்பான விடயங்கள். அவை தொடர்ந்தும் அப்படியே இருக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். (2-7)

# மரண அறிவித்தல்



தோற்றம் 06 • 01 • 1937

மறைவு 01 • 09 • 2020

## அமரர் பொன்னையா திரவியநாதன்

### (சுதுமலை, காரைநகர், ஆனைக்கோட்டை)

மதவடி வீதி, சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் பொன்னையா லேன், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா திரவியநாதன் 01.09.2020 செவ்வாய்கிழமை தனது 84ஆவது வயதில் இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சுந்தரம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொற்குணதேவியின் அருமை சகோதரரும் காலஞ்சென்ற இலங்காதேவி (ஆனைக்கோட்டை), காலஞ்சென்ற ஞானம்பிகை (காரைநகர்) மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் நேசமிகு கணவரும் திரவியகுமாரி (பிறேமா- டென்மார்க்), சித்திரகுமாரி (பிரீசா - டென்மார்க்), உருத்திரதீசன் (நேதாஜி - டென்மார்க்), விக்கிரமதீசன் (பாபுஜி - கனடா), ஞானேந்திரகுமாரி (விஜி - கனடா), பிறேமளகுமாரி (ராஜி - அவுஸ்திரேலியா), பிரமேந்திரதீசன் (ராஜாஜி தம்பி - கனடா), காலஞ்சென்ற ஜெயதீசன் மற்றும் கோமளதீசன் (சுபாஜி - ஆனைக்கோட்டை), திவ்வியதீசன் (பாபாஜி-சுவிஸ்), சூரியதீசன் (நேருஜி - டென்மார்க்), விமலதீசன் (வினோபாஜி - ஆனைக்கோட்டை), யதுகுலதீசன் (காந்திஜி - டென்மார்க்), பிரியதர்சினி (தீபா - ஆனைக்கோட்டை) ஆகியோரின் தகப்பனாரும் காலஞ்சென்ற நடராசா அவர்களின் மைத்துனரும், காலஞ்சென்ற இதயசூரியன் மற்றும் வாகீசன், வாசுதன் ஆகியோரின் தாய் மாமனாரும் இளங்கோவன், பாரதிதாசன், கௌரி, மிலானி, மனோகாந்தன், பிரபாகரன், அபிராமி, சரஸ்வதி, துர்க்கா, டிசாந்தி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பொன்னையா லேன், ஆனைக்கோட்டையில் உள்ள அன்னாரது இல்லத்தில் இன்று (03.09.2020) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்று யாழ்.கோம்பையன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:-

பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை.

பிரமேந்திரதீசன் (கனடா) 001 416 821 8390
விமலதீசன் (ஆனைக்கோட்டை) 077 301 9340

(3775)

# நவீன ரக வென்டிலேட்டர்கள் அமெரிக்கா நன்கொடை





(கொழும்பு)

இலங்கைக்கு 200 புதிய அதி நவீன ரக வென்டிலேட்டர்களை அமெரிக்கா நேற்று வழங்கியுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் அவற்றை சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராய்ச்சியிடம் கையளித்தார்.

கொரோனாவுக்கு எதிரான போராட்டத்தில் எங்கள் ஒத்துழைப்புக்கு இன்னொரு எடுத்துக்காட்டாக அமெரிக்க மக்களிடமிருந்து இந்த நன்கொடை இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது எனவும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் தெரிவித்தார். (ஜ-4)

# 23 ஆயிரம் ஹெக்டேயர் காட்டுப்பகுதியை சிங்கராஜ வனத்துடன் இணைக்கத் தீர்மானம்



(கொழும்பு)

சிங்கராஜ வனத்தை சுற்றியுள்ள 23 ஆயிரம் ஹெக்டேயர் காட்டுப்பகுதியை சிங்கராஜ வனத்துடன் இணைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டபிள்யூ. ஏ.சி.வேரகொட இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, சிங்கராஜ வன அமைப்பாக இதனை நிர்வகிக்க தீர்மானித்துள்ளதுடன், இதற்கான அனுமதியும் பெறப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கராஜ வனத்தின் எல்லைப் பகுதியை வரையறுக்கும் நடவடிக்கையும் முடிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

2 ஆம் ஆண்டு நினைவு நாள்



ஆழ்வான் தங்கராசா

தோற்றம் 1942.04.22 மறைவு 2018.08.28

பிறப்பு உண்டேல்
இறப்பு நிச்சயம் என்று தெரிந்தும்
உம் இழப்பை மனம்
ஏற்க மறுக்கிறதே அப்பா!
வாழ்வில் எமக்கு எல்லாமானீர்
ஏனோ எமை விட்டு
நீண்ட தூரம் சென்றீர்...!

03.09.2020 இன்றைய நாளில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும்மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(C-223)

ஸ்ரீதாரதா வீதி,
கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

பிள்ளைகள்.

# யானைகளின் தொல்லையை கட்டுப்படுத்துங்கள்-மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு தென்னியங்குளம் கிராமத்தில் யானைகளின் தொல்லைகளைக் கட்டுப்படுத்துமாறு துணுக்காய் பிரதேச செயலாளரிடம் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புதிதாக குடியமர்ந்த பகுதிக்குள் இரவு வேளைகளில் யானைகள் வருவதாகவும் இதன் காரணமாக நித்திரை விழித்திருந்து தம்மைத் தற்காத்துக்கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

கிராமத்திற்குள் வருகை தரும் யானைகள் பயன் தருமரங்களை அழித்து வருவதாகவும் வெடிகளைக் கொளுத்திய போதிலும் யானைகள் காடுகளுக்குள் திரும்புவதில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர். துணுக்காய் கோட்டை கட்டியகுளம் வீதியில் தென்னியங்குளம் மக்களுக்கான புதிய குடியிருப்புகளிலே இவ்வாறு யானைகளின் தொல்லை காணப்படுகின்றது.

எனவே உரிய நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஜ-5-350)

மரண அறிவித்தல்

செல்வி.மாலினிதேவி முத்துரத்தினம்

தோற்றம் 22.10.1954 மறைவு 01.09.2020



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி. மாலினிதேவி முத்துரத்தினம் அவர்கள் 01.09.2020 செவ்வாய்க்கிழமையன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துரத்தினம் - தவமணி ஆகியோரின் கனிஷ்ட புத்திரியும், பத்மாதேவி, கமலாதேவி, ரோகிணிதேவி, தவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஜெயராஜசிங்கம் மற்றும் Dr.கனகரத்தினம், தர்மஜெயசூரியர், உமா ஆகியோரின் அன்பு மைத்துனியும், உஷேந்தன், ஜெயந்தன், ஜெனினி, சுதாஜினி, அனோஜா, நிரோஜா, சஜீவ், ரோகன்ராஜ், தேனுகன் ஆகியோரின் சிறிய தாயாரும், சர்பிந், பானு, சியாமா, தயாபரன், கிருஷாந், தர்சினி, மோகனன், சுஜித்தா, வேல்தாஸ், விமலராஜன், இந்துகா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 03.09.2020 வியாழக்கிழமை 10 மணியளவில் அரச வீதி உரும்பிராயில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காட்டு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


அரச வீதி,
உரும்பிராய்.

(3768)

021 223 0785,
077 175 8485

தகவல்:
த.தர்மஜெயசூரியர்.





அமரர் வி.தர்மலிங்கத்தின் 35 ஆவது நினைவுதினம், தர்மலிங்கம் நினைவுக்குழுவினால் தாவடியிலுள்ள அவரது நினைவுத்தூபியில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. இந்நினைவுதின நிகழ்வில் அவரது புதல்வரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், பேராசிரியர் க. கந்தசாமி, வலம்புரி பிரதம ஆசிரியர் ந. விஜயசுந்தரம், மாவை. சேனாதிராசா, பாலச்சந்திரன் கஜதீபன், சீ.வீ.கே.சிவஞானம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (8-33)

# அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

தீவுக வலயத்திற்குட்பட்ட வகை III பாடசாலைகளான யா/அனலைதீவு தெற்கு அ.மி.த.க.பாடசாலை, யா/நெடுந்தீவு மாவிலித்துறை றோ.க.வித்தியாலயம், யா/நெடுந்தீவு ஸ்ரீஸ் கந்தா வித்தியாலயம், யா/பாலாவோடை இ.த.க. வித்தியாலயம், யா/மண்கும்பான் அ.த.க.பாடசாலை ஆகியவற்றில் அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்குப் பின்வரும் நிபந்தனைகளுடன் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது 3 வருடங்களாவது சேவையாற்றக்கூடிய வயதெல்லையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

வகை III பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவை வகுப்பு 3 இனைச் சேர்ந்தவர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.


தீவக வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் அதிபராகக் கடமையாற்றும் இ.அ.சே. - 3 ஐச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவங்களை தீவகக் கல்வி வலய நிர்வாகப் பிரிவில் பெற்றுப் பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவங்களை எதிர் வரும் 11 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், தீவகம், வேலணை எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (5)



ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 69 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புகுழுவின் இணைத்தலைவரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதனின் ஏற்பாட்டில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் விசேட பூஜைகளும் வழிபாடுகளும் இடம்பெற்றன.

(படம்:- ஐ.சிவசாந்தன்)




ஆவணிப் பூரணை தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம், நல்லையம்பதி அருள்மிகு சிங்காரவேலன் சிவகாயத்திரி அம்பாள் சுந்தர சுவர்க்கவாயில் சந்நிதானத்தில் விளக்கு பூஜை நேற்று நடைபெற்றது. (படங்கள்:- ஐ.சிவசாந்தன்)

# மழை நீடிக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மழையுடனான காலநிலை தொடரக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இடி மின்னலின் தாக்கமும் அதிகரித்துக் காணப்படும் என்பதால் பொதுமக்கள் அவதானமாகச் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

வேலை தொடர்பாக அடிக்கடி வீட்டிற்கு வெளியில் செல்பவர்கள், விவசாயிகள் ஆகியோர் இவ்விடயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

அத்துடன்காற்றின்வேகம்மணிக்கு 40 கிலோ மீற்றர் தொடக்கம் 80 வரையில் அதிகரித்துக் காணப்படும் என்பதால் கரையோரப்பிரதேசங்களில்வசிப்பவர்கள், மீனவர்கள் அவதானத்துடன் செயற்படுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.(5-8)

# வேம்பிராய் மயானத்தை நவீன மயப்படுத்த மூன்று மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட மீசாலை வடக்கு வேம்பிராய் மயானத்தை நவீன மயப்படுத்துவதற்காக சபையால் முப்பது இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி பிரதேசசபையில் அண்மையில் இடம்பெற்ற வரவு-செலவுத் திட்டம் தொடர்பான பகுப்பாய்வுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வேம்பிராய் மயானத்தை தரமான மயானமாக மாற்றுவதற்கு சாவகச்சேரி பிரதேச சபையின் 2021ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் முப்பது இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் அதனை வருமானம் ஈட்டும் மயானமாகவும் மாற்ற தீர்மானித்துள்ளோம்.

வருமானம் வந்தால் தான் தொடர்ந்து மயானத்தை பராமரிக்க முடியும்.

அத்துடன் வரவு-செலவுத் திட்டத்தில் மக்களின் கோரிக்கைகளையும் உள்வாங்க வேண்டும் என்ற கட்டுப்பாடு உள்ளது.

வீதிகள் புனரமைப்பு தொடர்பாக 2018 ஆம் ஆண்டில் இருந்து சபைக்கு பல கோரிக்கைகள் வந்துள்ளன.

கோரிக்கைகளில் பல கம்பெரலிய, சப்ரிகம திட்டங்கள் ஊடாகவும் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒதுக்கீடுகளின் மூலமாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளன..

நிறைவேற்றப்படாத கோரிக்கைகளை நாம் இந்த வரவு-செலவுத் திட்டத்திற்குள் உள்வாங்க வேண்டும்.

அத்துடன் இரு சபை உறுப்பினர்கள் இணைந்து உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீடுகளில் இருந்து வட்டாரங்களின் எல்லை வீதிகளைப் புனரமைப்பு செய்தால் சிறப்பாக இருக்கும் என அவர் தெரிவித்தார்.(ஜ-30)

# விக்னேஸ்வரனுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்

# தமிழ் மக்களுக்கு விடுக்கப்பட்டதாகவே கருதுகிறோம்

## முறையிடுவோம் என்கிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

(கொழும்பு)

**தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு விடுக்கப்பட்டுள்ள மிரட்டலும் அச்சுறுத்தலும் அனைத்துத்தமிழ் மக்களுக்கும் விடுக்கப்பட்டதாகவே கருத வேண்டியுள்ளது என்றும் இது தொடர்பில் சர்வதேச பாராளுமன்ற அவைக்கும் பொதுநலவாய பாராளுமன்ற அவைக்கும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி உரிய முறைப்பாடுகளை மேற்கொள்ளும் என்றும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப்பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.**



நேற்று ஊடகங்களுக்கு அனுப்பிய அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரி வித்துள்ளதாவது.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமாகிய சி.வி. விக்னேஸ்வரன் பாராளுமன்றத்தில் ஆற்றிய கன்னி உரை தொடர்பாக சிங்கள பௌத்த மேலாதிக்க இனவாதிகள் பாராளுமன்றத்தில் தெரிவித்த கண்டனங்களும் அநாகரிகமான வார்த்தைப் பிரயோகங்களும் கொலை அச்சுறுத்தல்களும் மிரட்டல்களும் பாராளுமன்ற சம்பிரதாயங்கள் வரையறைகளுக்கு அப்பாற்பட்டதாக இருப்பதாகவே தோன்றுகின்றது.

இலங்கையின் வரலாறு என்பது பொய்யையும் புனை கதைகளையும் உள்ளடக்கியதாக இருக்கிறதென்பதும், சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இலங்கையின் உண்மையான வரலாறு தெளிவுபடுத்தப்பட வேண்டும் எனவும் நாங்கள் விரும்புகின்றோம். அவ்வாறான தெளிவுதான் இனங்களுக்கிடையில் நம்பிக்கையையும் ஐக்கியத்தையும் நல்லிணக்கத்தையும் உருவாக்க வழிவகுக்கும் என்றும் கருதுகின்றோம்.

ஆரோக்கியமான விவாதங்களை முன்னெடுப்பதை விடுத்து, ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவிற்காக குரல் கொடுப்போரை அச்சுறுத்துவதும், மிரட்டுவதும் ஏற்புடையதல்ல. ஏற்கனவே சிங்கள பௌத்த இனவாதத்தை மூலதனமாகக் கொண்டு ஆட்சிக்கு வந்திருக்கும் அரசும், அதற்கு ஒரு படி மேலாக இனவாதத்தைப் பேசினாலே தமது அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள்ளலாம் என்று நினைக்கும் எதிர்க்கட்சியினரும் தொடர்ந்தும் தமிழின விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதென்பது இந்த நாட்டினுடைய சுபீட்சமான எதிர்காலத்திற்கும் இவர்கள் பேசுகின்ற அபிவிருத்திக்கும் ஒரு போதும் துணைபுரியாது.

விக்னேஸ்வரனுக்கு எதிராக விடுக்கப்பட்ட மிரட்டல் மற்றும் அச்சுறுத்தல் என்பது வெறுமனே விக்னேஸ்வரனுக்கு எதிரானது மாத்திரமல்ல. அவரது கொள்கையைப் பேசக் கூடிய அனைத்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தமிழ் மக்களுக்கும் விடுக்கப்பட்ட மிரட்டலாகவே நாங்கள் பார்க்கின்றோம். சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களின் இந்த மிரட்டல்கள் தொடர்பாக பாராளுமன்றத்திலோ வெளியிலோ தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மௌனிகளாக இருப்பதானது அவர்கள் பேசுகின்ற தேசியத்திற்கும் அவர்கள் மக்களிடம் பெற்றுக் கொண்ட ஆணைக்கும் நேரெதிரான செயற்பாடாகவே நாங்கள் கருதுகின்றோம்.

ஆகவே, சர்வதேச பாராளுமன்ற அவைக்கும் (Inter Parliamentary Union) அதே போல் பொதுநலவாய பாராளுமன்ற அவைக்கும் (Commonwealth Parliamentary Union) இந்த அச்சுறுத்தல் தொடர்பாக தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி உரிய முறைப்பாடுகளை மேற்கொள்ளும் என தெரிவித்துள்ளார். (ஜ-4)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 1<br>கி.பா: 14 ¼ செவ் 1 இல் உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: Diploma in Software Engineering Accounts Officer (Private)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகமுள்ள பெண்<br>தொ.இ: B/11144 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 1<br>கி.பா: 24 செவ் 12 இல்<br>தகைமை/தொழில்: பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகமுள்ள மணமகன்<br>தொ.இ: G/11172 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 1<br>கி.பா: 79 செவ் 8 இல் உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா/த. Restaurant இல் பணி புரிகின்றார்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/11146 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 3<br>கி.பா: 25 ¾ செவ் 1 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: PhD (in progress), Teaching Assistant (part time) (USA)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி மணமகன் உயர் உத்தியோகத்தர் அல்லது அமெரிக்கா, கனடா நாட்டு மணமகன் விரும்பத்தக்கது<br>தொ.இ: G/11178 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 2<br>கி.பா: 45 ¾ செவ் 7இல் உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: B.Sc, M.Sc in information Management Senior Software Engineer in USA<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச, தனியார் உத்தியோகமுள்ள மணமகள்<br>தொ.இ: B/11149 | பிறப்பு: 1988 கிறிஸ்தவம்<br>உயரம்: 158cm<br>தகைமை/தொழில்: கலைப் பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச உயர் தனியார் உத்தியோகமுள்ள மணமகன்<br>தொ.இ: G/11182 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 2<br>கி.பா: 56 ½ செவ் 12 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Bachelor of Engineering Following MSc, Electrical Superintendent (CEB)<br>எதிர்பார்ப்பு: வைத்தியர், கணக்காளர், சட்டத்தரணி போன்ற உத்தியோகத்தர்கள்<br>தொ.இ: B/11150 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: செவ் 1 இல் உயரம்: 165cm<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. கேக் வடிவமைப்பாளர்<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம் உள்ள மணமகன்<br>தொ.இ: G/11186 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## வேலையாட்கள் தேவை

பருத்தித்துறையில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றிற்கு தட்டச்சு (ரைப்பிங்) செய்யக் கூடிய நல்ல அனுபவம் உள்ள வேலையாட்கள் தேவை.

தொடர்பு 0778535693 (C-225)

## சேவை

நீங்கள் அடகு வைத்த மீட்டெடுக்க முடி யாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறு வனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப் பணம் அவ்விடத் திலேயே தரப்படும். நாடளாவிய ரீதியில் சிநேகபூர்வமான சேவை AAA Gold Center

0765684346 (C-1008)

## NOTICE

### UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
### OPERATIONAL TECHNICAL SECRETARIAT (OTS)
### WORLD BANK FUNDED ACCELERATING HIGHER EDUCATION EXPANSION AND DEVELOPMENT (AHEAD) OPERATION
### WALK – IN - INTERVIEW

**POST OF PROJECT ASSISTANT (FULL TIME) –ON CONTRACT BASIS – 04 VACANCIES**

**ELTA ELSE – FACULTY LEVEL DEVELOPMENT PROJECT FACULTY OF ARTS, FACULTY OF AGRICULTURE, FACULTY OF SCIENCE & FACULTY OF APPLIED SCIENCE**

Walk in Interview for the above post (Full Time) – On Contract Basis will be held on **08.09.2020 – 9.00Am to 12.00 Noon** at the Staff Development Center, Seminar Hall of the University of Jaffna.

Eligible Candidates are requested to be present for an interview with self-prepared application in the prescribed format along with relevant original certificates and the National Identity Card (NIC) on the date and the time mentioned above.

For further details please visit the University of Jaffna website

**Registrar** **www.jfn.ac.lk.** (C-224)

# அதிபரின் இடமாற்றத்தை எதிர்த்து பெற்றோர், மாணவர்கள் ஆர்ப்பாட்டம்



(மன்னார்)

மன்னார் பள்ளிமுனை புனித லூசியா மகா வித்தியாலயத்தில் கடமையாற்றி வந்த அதிபரை வேறு இடத்திற்கு மாற்றம் செய்ய மேற் கொண்ட நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், குறித்த அதிபரை இடமாற்றம் செய்ய வேண்டாம் எனக் கோரி மாணவர்களும் பெற்றோர்களும் நேற்று புதன் கிழமை காலை பாடசா லைக்கு முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னார் பள்ளிமுனை புனித லூசியா மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி வந்த எஸ்.கே.பிகிராடோவை இடமாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.


இந்த நிலையில் பாடசாலை அதிபரின் இடமாற்றத்தை கண்டித்தும், குறித்த அதிபரை இடமாற்றம் செய்ய வேண்டாம் எனக் கோரியும் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் நேற்றுக் காலை 7.30 மணியளவில் பாடசா லைக்கு முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் கே.ஜே.பிரட்லி, மன்னார் நகர முதல்வர் ஞா.அன்ரனி டேவிட்சன், மன்னார் நகர சபையின் உப தலைவர் ஜாட்சன் பிகிராடோ, மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.கிருஸாந்தன் ஆகியோர் பாடசாலைக்குச் சென்று பெற்றோருடன் கலந்துரையாடினர்.

இதன்போது பெற்றோர் மற்றும் மாணவர்களின் கோரிக்கைக்கு அமைவாக அதிபரின் இடமாற்றத்தை தற்காலிகமாக இரத்துச் செய்வதாக மன்னார் வலயக்கல்வி பணிப்பாளர் கே.ஜே.பிரட்லி உறுதியளித்தார்.

அதனையடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டு. மாணவர்கள் பாடசாலைக்குச் சென்று கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (5-4-285)

# மன்னாரில் தாழ்நில கிராமங்கள் நீரில் மூழ்கின



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நேற்றும் நேற்று முன்தினமும் பெய்த கடும் மழை காரணமாக தாழ்நில கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

குறிப்பாக மன்னார் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட சாந்திபுரம், ஜீவபுரம், ஜிம்றோன்நகர், எமில்நகர், எழுத்தூர் உட்பட பல்வேறு கிராமங்கள் நீரினால் மூழ்கியுள்ளதுடன் மழை நீர் வடிந்து செல்லக்கூடிய விதமாக வடிகால் அமைப்புக்கள் ஒழுங் கான முறையில் பராமரிக்கப் படாமையினால் மழை நீர் தேங்கியுள்ளது. அதேநேரத்தில் மழை தொடர்ந்து பெய்யும் பட்சத்தில் மக்கள் இடம்பெயர வேண்டிய அபாயம் ஏற்படும் என சுட்டிக் காட்டப்படுகின்றது.

எனவே குறித்த விடயத்தில் மன்னார் நகர சபை மற்றும் பிரதேச செயலகம் உடனடியாக கவனம் செலுத்துமாறு பொது மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (5-4-285)

# "மன அமைதியுடன் பணி செய்ய விடுங்கள்" வவுனியா வைத்தியசாலை ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

(நெளுக்குளம்)

வவுனியா வைத்தியசாலையில் சிற்றூழியர்களால் பணிபுறக்கணிப்பு நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா வைத்தியசாலை வளாகத்தில் காலை 9 மணிக்கு முன்னெடுக்கப்பட்ட குறித்த போராட்டம் முற்பகல் 11 மணிவரையும் இடம் பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வர்கள் கருத்துத் தெரிவித்த போது தமது பணி நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில்



கைவிரல் அடையாள நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அதனை தவிர்த்து பழைய முறையின்படியே தாங்கள் கையொப்பம் இடுவதற்கான செயற்பாட்டை தொடர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டதுடன், தமது கோரிக்கை நிறைவேறாவிடில் போராட்டங்கள் தொடரும் என்றும் எச்சரித்துள்ளனர்.

"ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், அரச சட்டங்கள் அனைவருக்கும் சமன், எமக்கு மட்டும் ஏன் இந்த அநீதி? மன அமைதியுடன் பணிசெய்ய விடு" போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைளை ஏந்தியிருந்தனர். (5-4-299)

# இந்து முறைப்படி திருமணம் செய்த சிங்கள ஜோடி



(குருமன்காடு)

சிங்கள ஜோடி ஒன்று இந்து முறைப்படி திருமணம் செய்து கொண்டமை பலருக்கும் நெகிழ்ச்சியையும் ஆச்சரியத்தினையும் ஏற்படுத்தியுள்ளது.

அநுராதபுரத்தில் வசிக்கும் எம்.ஐ.எம். ரத்நாயக்கா மற்றும் கஜானாக்க பூர்ணிமா ஆகிய ஜோடியே இவ்வாறு இந்து முறைப்படி திருமணம் செய்துள்ளனர்.

இவர்களின் திருமணம்நேற்று வவு னியா குருமன்காடு ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் நடைபெற்றது. பலரும் குறித்த தம்பதியருக்கு வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

இதேவேளை, தமிழராகிய நாம் எமது பண்பாடு கலாசாரத்தை விட்டு நழுவி மேலைத்தேய கலாசாரச் சாயல்களுக்குள் புகும் இவ்வேளையில் தமிழ் கலாசாரப்படி சகோதர மொழி இனத்தவர் செய்து கொண்ட திருமணம் எம்மவர்க்கு தகுந்த பாடமாகும் என பலர் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வருகின்றனர். (ஜ-4)

# வனவளத் துறையினரால் முதிரை மரக்குற்றிகளுடன் ஒருவர் கைது

(கண்டாவளை)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் தேராவில் வனப்பிர தேசத்திற்குரிய வேணாவில் காட்டுப்பகுதியில் சட்டவிரோத மரக் கடத்தலில் ஈடுபட்ட வாகனம் ஒன்றை வனவளத் துறையினர் மீட்டதுடன் சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் தேராவில் ஒட்டுசுட்டான் வனப்பகுதிக்குட்பட்ட வேணாவில் காட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை சட்டவிரோதமான முறையில் முதிரை மரக்குற்றிகளை ஏற்றிச் சென்ற பட்டா ரக வாகனம் ஒன்றையும் பெறுமதிவாய்ந்த முதிரை மரக்குற்றிகளையும் வனவளத் துறையினர் மீட்டுள்ளதுடன் சந்தேக



நபரான வாகனத்தின் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு வட்டார வனவள உத்தியோகத்தர் ரீ.கௌதமனின் வழிகாட்டலில் புதுக்குடியிருப்பு பகுதி வனவள உத்தியோகத்தர் பீ.சஞ்சீவன் தலைமையில் மேற்கொள்ளப் பட்ட இந்நடவடிக்கையின் போதே மேற்படி வாகனம் மற்றும் முதிரை மரக்குற்றிகள் மீட்கப்பட்டன.

மேற்படி கைது செய்யப்பட்ட சந்தேக நபரை முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் சான்றுப் பொருட்களுடன் முன்னிலைப்படுத்தவுள்ளதாகவும் வனவள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (5-4-315)

# சிங்கராஜவனத்தில் அபிவிருத்தியாக கருதப்படுவது வில்பத்துவில் இனவாதமாக நோக்கப்படுகிறது

## இம்ரான் மஹ்ரூப்



(கொழும்பு)

சிங்கராஜ பகுதியில் அபிவிருத்தியாக நோக்கப்படுவது வில்பத்துவில் இனவாதமாக நோக்கப்படுகிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

கிண்ணியா, சூரங்கல்லில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சிங்கராஜ வனத்தின் ஒரு பகுதியை ஊடறுத்து வீதி ஒன்று அமைக்கப்பட்டதை தொடர்ந்து எழுந்த சர்ச்சையால் அந்த இடத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதி அந்த பாதையின் நிர்மாணப்பணிகளை தொடர்ந்தும் முன்னெடுக்க அனுமதி அளித்திருந்தார்.

சிங்கராஜா வனத்தை ஒட்டி வாழும் மக்களுக்கு கிடைக்கும் அபிவிருத்தி வில்பத்துவை அண்டி வாழும் மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது.

யுத்தத் தால் இடம்பெயர்ந்த அந்த பகுதி மக்கள் அவர்களின் சொந்த இடங்களில் மீள குடியமர்ந்த போது வில்பத்து வனப்பகுதியை அம்மக்கள் அழிக்கிறார்கள் என கூறியவர்களே இன்று வனப் பகுதிக்கு சேதம் ஏற்படாமல் பாதையை அமைக்க முடியும் எனக் கூறுகின்றனர்.

வனப்பகுதிக்கு பாதிப்பு ஏற்படாமல் பாதை அமைக்க முடியும் என்றால் வனப் பகுதிக்கு பாதிப்பு ஏற்படாமல் மக்களை மீள்குடியேற்றவும் முடியும்.

நடைபெற்றுமுடிந்த அனைத்து தேர்தல்களிலும் வில்பத்துவை காரணம் காட்டி பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத்துக்கு எதிராக சேறுபூசி வாக்கு சேகரித்தவர்களே இன்று சிங்கராஜவில் பாதை அமைக்கிறார்கள்.

இவர்களால் சிங்கராஜ பகுதியில் அபிவிருத்தியாக நோக்கப்படுவது வில்பத்துவில் இனவாதமாக நோக்கப்படுகிறது.

சிங்கராஜவுக்கு ஜனாதிபதி சென்று அப்பகுதி மக்களிடம் பாதை வேண்டுமா என கேட்டதை போல் வில்பத்து பகுதிக்கும் சென்று அம்மக்களின் அபிப்பிராயத்தை கேட்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# நாட்டின் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும்

## 19வது திருத்தம் குறித்து ராஜித



(கொழும்பு)

நாட்டின் ஜனநாயகத்தை இல்லாதொழிக்க முற்படக்கூடாது என பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "19 ஆவது திருத்தச்சட்டமானது நாட்டுக்கு தேவையான ஒன்றாகும். அதில் உள்ள குறைபாடுகளை நீக்கவே நாம் முற்பட வேண்டும். அதனை செய்யாமல், அதில் உள்ள ஜனநாயகத்தை இல்லாதொழிக்க யாரும் முற்படக்கூடாது.

நாம் 19 ஆவது திருத்தச் சட்டத்தை பாதுகாக்கவே முயற்சிக்கிறோம். இதன் ஊடாக அரசாங்கம் பலமடைந்துள்ளது என்றுதான் கூற வேண்டும்.

இப்படியான ஒரு திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்க முற்படுவதானது, சர்வாதிகார ஆட்சிக்கு வழிகோலுவதாகவே அமைந்துள்ளது" என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

# ஐ.தே.க. உறுப்புரிமை நீக்கப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டாம்

## மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

கட்சி உறுப்புரிமை நீக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் 38 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு எதிராக எதிர்வரும் 10 ஆம் திகதி வரை அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் என மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தம்மை ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து நீக்கியமைக்கு எதிராக அவர்கள் தாக்கல் செய்த மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.


கட்சி உறுப்புரிமையை நீக்கும் செயற்பாட்டை தடுத்து, அதற்கு எதிராக இடைக்கால தடையுத்தரவை பிறப்பிக்குமாறு மனுதாரர்கள் கோரியிருந்தனர்.

அத்துடன், கட்சி உறுப்புரிமையிலிருந்து நீக்கி, உள்ளூராட்சி மன்றங்களின் பதவியிலிருந்து நீக்குதல் தொடர்பில் வர்த்தமானியில் அறிவிப்பதை நிறுத்துமாறு உத்தரவிடுமாறும் அவர்கள் கோரியிருந்தனர்.

கொழும்பு மாநகர சபை உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் 38 உறுப்பினர்கள் தாக்கல் செய்திருந்த இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதிபதி ஏ.எச்.எம்.டி. நவாஸ் மற்றும் நீதிபதி சோபித ராஜகருணா ஆகியோர் முன்னிலையில் நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிர்வரும் 9 ஆம் திகதி இந்த மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## மின்னல் தாக்கி 27 பசுக்கள் பலி



(மட்டக்களப்பு)

மின்னல் தாக்கியதில் 27 பசுக்கள் பரிதாபமாக உயிரிழந்துள்ளன. இச் சம்பவம் நேற்று முன்தினமிரவு மட்டக்களப்பு வாகரை மாவடி ஓடைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பண்ணையாளர் ஒருவரின் பசு மாடுகளே இவ்வாறு மின்னல் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளன. (ஜ-4)

## போதைப்பொருளுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

சப்புகஸ்கந்த பகுதியில் பல மில்லியன் ரூபா பெறுமதியான 23 கிலோகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அத்துடன் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்த பெண்ணான குடு சாந்தா என்ற டினேஷா சந்தமாலி கொழும்பு பாலத்துறை பகுதியில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகமும் பணிப்பொறுப்புகளும் - ஒரு தொகுப்பு



09

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

அவ்வாறான அரசியலமைப்பு ரீதியான சட்டத்தினால் ஒரு நிறுவனம் உருவாகுமாயின் அந் நிறுவனம் அரசியலமைப்பு ரீதியான நிறுவனம்மாக அழைக்கப்படும்.

விளங்கிக் கொண்டு, தமது பணியை நிறைவேற்ற வேண்டியுள்ளது. அதற்கேற்ப, தமது பணியை நிறைவேற்றுகையில் தமக்கு வரையறுக்கப்பட்டுள்ள

**உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்கள்**

- வரிகள், இறைகள் மற்றும் பல்வேறு வகையான அறவீடுகளை விதித்தல்
- பொது வீதிகள், தெருக்கள், வாய்க்கால்கள், பாலங்கள், பொதுச்சந்தை, போன்றனவற்றில் உள்ள அதிகாரங்கள்
- அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுதல்
- சுற்றாடலைப் பேணிப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- வீதி வரைபடங்கள் மற்றும் நிர்மாண வரைபடங்களை சான்றுப்படுத்தி விநியோகித்தல்
- சேரிகளையும், குடிசைகளையும் அகற்றுதல், சுகாதாரத்துக்குப் பங்கம் விளைவிக்கும் இடங்களை அழித்தல்
- இயற்கை நீர் ஊற்றுகள், நீர் தேக்கங்கள் போன்றவற்றின் உரிமைகள்

முதல்வர்-தலைவர் என்பவர் அவ்வாறான அரசியலமைப்பு ரீதியான நிறுவனமொன்றின் பிரதான நிறைவேற்றுப் பதவி வகிப்போராவர். அரசியலமைப்பு நிறுவனத்தின் செயற்படும் அளவு, செயற்படும் விதம் மற்றும் செயற்படும் ப்ரப்பெல்லை, எழுத்து மூலச் சட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனால், அரசியலமைப்புச் சட்டத்தினால் விதிக்கப்பட்டுள்ளவாறு அந்த அளவுகளில் நின்று, தமது செயற்பாட்டை நடத்திச் செல்ல வேண்டியுள்ளது. அவ்வாறே அரசியலமைப்புச் சட்டத்தினால் விதிக்கப்பட்டுள்ள பணிகளைச் செய்யாதிருக்கவோ அகற்றிவிடவோ முடியாது.

அவர்கள் சட்டரீதியான கட்டமைப்புக்குள் செயலாற்ற வேண்டும். உள்ளூராட்சி மன்றங்களின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்களாகச் செயற்படுகின்ற முதல்வர்-தலைவர்கள் பொதுச் சேவைக்காக சபை நிதியை அல்லது வேறு ஏதேனும் ஒதுக்கீடுகளை கையாளும் போது சட்டம் எவ்வளவு தூரம் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது? அதுபற்றி தாம் ஏன் கவனத்துடன் செயற்பட வேண்டும் என்பது பற்றி தெளிவான புரிதலைக் கொண்டிருத்தல் வேண்டும்.

எவ்வாறாயினும் மக்கள் பிரதிநிதிகளாக முதல்வர் அல்லது தலைவர் இரண்டு பாத்திரங்களில் தமது கால்களை நிறுத்தி வைக்க வேண்டியுள்ளது. மக்களுடைய வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்படும் நபர் என்பதால் மக்களுக்கு உணர்வுபூர்வமாக செயலாற்ற வேண்டியுள்ளது. மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றும் போது சட்டக் கட்டமைப்புக்குள் நின்று பணியாற்ற வேண்டியது மற்றைய பாத்திரமாகும். எனவே இந்த வகிபாகங்கள் இரண்டையும் தெளிவாக எழுத்துமூல சட்ட எல்லைக்குள் நின்று அதனை நடைமுறைப்படுத்துவதை கவனத்திற் கொள்ள வேண்டியுள்ளது.

பிரதேச சபைகளைப் பொறுத்தமட்டில், 1987, 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளை நடைமுறைப்படுத்துதலே சபையின் கடமை ஆகும். பிரதேச சபையானது நிலையாக தொடர்ந்து வாழ்கின்ற ஒரு சட்ட அந்தஸ்தினை பெற்ற ஒரு நபர் எனக் கூறலாம்.

அதனால் சட்டத்தின் மூலம் குறிப்பிடப்பட்ட கடமைகளினை மட்டும் சபை முன்னெடுக்கின்றது. மற்றது உள்ளூராட்சி நிறுவன செயற்பாட்டு கட்டமைப்பிற்குள் அவை செயற்படுத்துவதற்கு இருக்கின்ற அதிகாரங்கள், கடமையினை செயற்படுத்தும் முறைமை மற்றும் நிறுவனத்திடம் இருக்கின்ற வளங்களினை செயல் மிக்கதாக பயன்படுத்துவதற்கான இடைக்கால சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள், பிரகடனங்கள் தொடர்பாகவும் புரிந்து கொள்ளும் ஆற்றலுடன் செயற்படுதலாகும். மேலும் அமைச்சரினால் அமுல்படுத்தப்பட்டிருக்கும் நிதியியல் நிர்வாக ஏற்பாடுகள் மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உப விதிகள் தொடர்பாக முழுமையான விளக்கத்துடன் செயற்படுதல் வேண்டும்.

பிரதேச சபைகளைப் பொறுத்த மட்டில், பிரதேச சபை சட்டத்தினுடைய 122 மற்றும் 126 ஆம் உறுப்புரைகள் மூலம் உப விதிகளினை அமைத்துக் கொள்வதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளதனால், பிரதேசத்தினுடைய தேவைகளிற்கேற்ப உப விதிகளை உருவாக்கி சட்ட அந்தஸ்தினை பெற்றுக் கொள்ளமுடியும். பிரதேச மக்களுக்காக வினைத்திறன் மிக்க அபிவிருத்தி திட்டங்களினை முன்மொழிந்து நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

**பிரதேச சபைகளைப் பொறுத்த மட்டில், பிரதேச சபை சட்டத்தினுடைய 122 மற்றும் 126 ஆம் பிரிவுகள் மூலம் உப விதிகளினை அமைத்துக் கொள்வதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளதனால் பிரதேசத்தினுடைய தேவைகளிற்கேற்ப பிரதேசசபை உப விதி களை உருவாக்கி சட்ட அந்தஸ் தினை பெற்றுக் கொள்ளமுடியும்.**

சபையின் விவகாரங்கள் தொடர்பாக சட்ட ரீதியாகவும், அர்த்தமுள்ளதாகவும் பெரும்பான்மையானோரின் விருப்பத்தின்படி முடிவு செய்து பிரதேச மக்களினுடைய நல்வாழ்விற்காகவும், அவர்களுக்கு இருக்கும் வசதிகளை மேம்படுத்தவும், சேவைகளினை சரியான முறையில் பெற்றுக் கொடுப்பதற்காகவும், ஆட்சி செய்வதற்காகவும் செயற்படுதல். என்பன பிரதேச சபையின் பணிகளாகும்.

### மேயர்/தலைவரின் நிறைவேற்றுச் செயற்பாடுகள் மற்றும் பொறுப்புகள்

உள்ளூராட்சி மன்றத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் என்ற வகையில் முதல்வர்/தலைவர் எழுத்து மூலச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப, மற்றும் மாகாணத்தின் விடயத்துக்குப் பொறுப்புக் கூறும் அமைச்சரால் வெளியிடப்படக்கூடிய ஆலோசனைகளின் கீழும் சபையின் நிதி மற்றும் வழிகாட்டல் நடவடிக்கைகளை, தமது பொது முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வையின் கீழ் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

பிரதேச சபைகளைப் பொறுத்த மட்டில், பிரதேச சபைத் தலைவரின் பொறுப்புக்கள் 1987, 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் (பி.ச) சட்டத்திலும் பிரதேச சபை ஒன்றின் கணக்கு ்வைத்தல் பற்றி பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிகளில் (1988) உள்ள ஏற்பாடுகளிலும் (ஏற்பாடு) தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மாநகரசபையாயின் மாநகர பிதாவும், நகர சபை அல்லது பிரதேச சபையாயின் தவிசாளரும் பிரதான நிறைவேற்று அதிகாரிகளாக விளங்குகின்றனர். உரிய சட்டங்களின் மூலம் அவர்களுக்கு பின்வரும் அதிகாரங்கள் காணப்படுகின்றன.**

**● சபையின் கூட்டத்தொடரை தொடங்குதல் மற்றும் ஒத்தி வைத்தல்.**

**● சபை நடவடிக்கைகளுக்கு தலைமை வகித்தல்.**

**● மக்கள் பயன்பாட்டுக்கான சேவைகளை வழங்குவதற்கு முன்னிறுத்தல்**

● பிரதேச சபைத் தலைவர் பிரதேச சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரியாக செயற்படல். பிரதேச சபைகள் சட்டம் 8(1) மற்றும் ஏற்பாடு 2(1)

1987 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 8ஆம் வாசகத்தின் (1)ஆம் உப வாசகத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. 'பிரதேச சபையொன்றின் தலைவர் பிரதேச சபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராதல் வேண்டும். பிரதேச சபையொன்றினால் மேற்கொள்ளப்பட வேண்டியது என அல்லது நிறைவேற்றப்பட வேண்டியது என இச் சட்டத்தினால் அல்லது வேறேதும் எழுத்து மூலச் சட்டத்தினால் ஆணையிடப்பட்டுள்ள அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ள அனைத்து செயற்பாடுகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றல், சொற்தொடர்புகளுக்கு ஏற்ப முரண்பாடுள்ள கருத்தாக தோன்றினாலேயன்றி தலைவரால் மேற்கொள்ளப்பட வேண்டும். அல்லது நிறைவேற்றப்பட வேண்டும்.'

● நகரசபை தலைவரின் நிறைவேற்றுச் செயற்பாடுகள் மற்றும் பொறுப்புகள்

255ஆம் அதிகாரமான, நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 19ஆம் வாசகத்தின் (3)ஆம் உப வாசகத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. 'நகரசபையொன்றின் தலைவர் 170அ வாசகத்தின் ஏற்பாடுகளின் கீழ், சபையின் பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளராக இருக்க வேண்டியதுடன், சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய அல்லது நிறைவேற்றப்பட வேண்டியது என இக் கட்டளைச் சட்டத்தினால் அல்லது வேறேதும் எழுத்துமூல சட்டத்தினால் ஆணையிடப்பட்டுள்ள அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ள அனைத்து நிறைவேற்றுச் செயற்பாடுகள் மற்றும் பொறுப்புகள், சொற்கள் தொடர்புகளுக்கு நேரெதிர் எண்ணத்துடன் காணப்பட்டாலன்றி, தலைவரால் மேற்கொள்ளப்படலாம். அல்லது நிறைவேற்றப்படலாம்.

● மாநகர சபை தலைவரின் நிறைவேற்றுச் செயற்பாடுகள் மற்றும் பொறுப்புகள்

252ஆம் அதிகாரமான மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 14ஆம் வாசகத்தின் (3)ஆவது உப வாசகத்திற்கு ஏற்ப, 'மாநகர சபையொன்றின் நகர முதல்வர் 254(ஆ) வாசகத்தின் ஏற்பாடுகளின் கீழ், சபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக வேண்டியதுடன் சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய அல்லது நிறைவேற்றப்பட வேண்டியது என இக் கட்டளைச் சட்டத்தினால் அல்லது வேறேதும் எழுத்து மூல சட்டத்தினால் ஆணையிடப்பட்டுள்ள அல்லது அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள நிறைவேற்றுச் செயற்பாடுகள் மற்றும் பொறுப்புகள், சொற்தொடர்புகளுக்கு நேரெதிர் எண்ணத்துடன் காணப்பட்டாலன்றி, நகரமுதல்வரால் மேற்கொள்ளப்படலாம். அல்லது நிறைவேற்றப்படலாம்.'

(தொடரும்...)

# ராகு-கேது பெயர்ச்சிப் பலன்கள்

## 01.09.2020 - 20.03.2022

## பன்னிரெண்டில் ராகு வருகிறது... பல வழிகளில் விரயம் உண்டு!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



### மிதுன இராசி வாசகர்களே!

செப்டெம்பர் முதலாம் திகதி முதல் உங்கள் இராசிக்கு 12ஆம் இடத்தில் ராகுவும், 6ஆம் இடத்தில் கேதுவும் இருக்கிறார்கள். ஜென்மத்தை விட்டு பாம்பு கிரகம்விலகும்பொழுது நல்லபலன்களை வழங்கும் என்பது ஜோதிட நியதி.

நவம்பர் 15 ஆம் திகதி மகர இராசிக்கு குரு பகவான் செல்கின்றார். அங்கிருந்து கொண்டு 2, 4, 12 ஆகிய இடங்களைப் பார்க்கின்றார். டிசெம்பர் 26 ஆம் திகதி மகர இராசிக்கு சனிவந்து அஷ்டமத்துச் சனியாக அமையப் போகின்றார். அதன்பிறகு நவம்பர் 2021 இல் கும்ப இராசிக்கு குரு செல்கின்றார். அங்கிருந்து கொண்டு உங்கள் இராசியையும், மேலும் 3, 5 ஆகிய இடங்களையும் பார்க்கப் போகின்றார்.

### இடமாற்றங்களால் இனிமை தரும் ராகு!

### எதிரிகளோடு போராட வைக்கும் கேது!

ராகு இப்பொழுது சஞ்சரிக்கப் போகும் இடம் 12ஆம் இடமாகும். எனவே விரயங்கள் அதிகரிக்கும் என்பது பொது நியதி. இருப்பினும்



12ஆம் இடம் என்பது பயணம், தியாகம், கடன் தீர்த்தல், இடமாற்றம், பணி நீக்கம், உடல்நலக் குறைபாடு, மனப் போராட்டம், மூதாதையர் சொத்துக்கள் போன்றவற்றையும் குறிக்கும் இடமாகும். எனவே அங்கு வரும் ராகுவால் உலுக்கி எடுத்த பிரச்சினைகள் ஒவ் வொன்றாக மாறும். சுபவிரயங்கள் அதிகரிக்கும். தூரதேசத்தில் இருந்து ஒரு சிலருக்கு அழைப்புகள் வரலாம். வீடு மாற்றங்களும், உத்தியோக மாற்றங்களும் விருப்பம் போல அமையும்.

6ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் கேது எதிர்ப்பு, வியாதி, கடன் ஆகியவற்றின் தன்மையை அதிகரிக்கலாம். அதே நேரத்தில் புதிய வேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு வேலை கிடைக்கும். பணி நிரந்தரம் ஆகாதவர்களுக்கு பணி நிரந்தம் ஆகும். உறவினர்களையும், உடனிருப்பவர்களையும் அனுசரித்துச் செல்வதன் மூலமே ஆதாயம் உண்டு. ஒவ்வாத உணவுகளை உட்கொள்வதன் மூலம் உடல்நலச் சீர்கேடுகள் உண்டாகலாம்.

### செவ்வாய் சாரத்தில் ராகுவின் சஞ்சாரம் (01.09.2020 முதல் 04.01.2021 வரை)

மிருகசீரிட நட்சத்திரக்காலில் செவ்வாய் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, வருமானம் திருப்திகரமாக இருக்கும். வளர்ச்சிப்பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். நீடித்த நோய் அகல நீங்கள் எடுத்த முயற்சி கைகூடும். செவ்வாய், உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதி. உள்நாட்டில் உங்கள் தொழில், வளர்ச்சி அடைவது மட்டுமன்றி வெளிநாட்டிலிருந்தும் அழைப்புகள் வரலாம்.

### சந்திரன் சாரத்தில் ராகுவின் சஞ்சாரம் (05.01.2021 முதல் 12.09.2021 வரை)

உங்கள் இராசிக்கு 2ஆம் இடத்திற்கு அதிபதியானவர் சந்திரன் ஆவார். வாக்கு, தனம், குடும்பம் ஆகியவற்றைக் குறிக்குமிடம் இரண்டாமிடமாகும். அந்த இடத்திற்குரிய அதிபதியின் சாரத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கும் பொழுது மிகுந்த நற்பலன்களைக் கொடுப்பார். பணப்புழக்கம் நன்றாக இருக்கும். மனக் குழப்பத்தில் இருந்து விடுபடுவீர்கள். மக்கள் செல்வங்களின் கல்யாணக்கனவுகளை நனவாக்க எடுத்த முயற்சி கைகூடும். வீடு கட்ட வேண்டும் அல்லது கட்டிய வீட்டைப் பழுது பார்க்க வேண்டுமென்று நீங்கள் நினைத்திருந்தால் அந்த எண்ணங்கள் ஈடேறும்.

### சூரியன் சாரத்தில் ராகுவின் சஞ்சாரம் (13.09.2021 முதல் 20.03.2022 வரை)

கார்த்திகை நட்சத்திரக்காலில் சூரியனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் இந்த நேரத்தில், உற்றார், உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். குறிப்பாகப் பெற்றோர்கள் மூலம் ஏற்பட்ட பிரச்சினை அகலும். வெற்றிக்குரிய ஸ்தானம் 3ஆம் இடமாகும். அந்த இடத்திற்குரிய கிரகம் சூரியனாவார். அவரது சாரத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, நன்மைகளை அதிகம் எதிர்பார்க்கலாம். வழக்குகள் சாதகமாக முடியக்கூடிய சூழ்நிலை உண்டு. அரசுப் பணியில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் திடீரென மாற்றப்படலாம். சகோதர வழியில் திருமணம் முடியவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு அது நிறைவேறும். உத்தியோகம் மூலம் நீண்டதூரப் பயண வாய்ப்புகள் வரலாம்.

### புதன் சாரத்தில் கேதுவின் சஞ்சாரம் (01.09.2020 முதல் 09.05.2021 வரை)

கேட்டை நட்சத்திரக்காலில் புதன் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, குடும்ப ஒற்றுமை பலப்படும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். பணப்புழக்கம் அதிகரிக்கும். ஆயினும் தேக ஆரோக்கியத்தில் மட்டும் ஏதேனும் தொல்லை வந்து கொண்டே இருக்கும். உணவுக்கட்டுப்பாடு அவசியம் தேவை. விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரலாம். தாயின் ஆதரவு கிடைக்கும். 'இடம், பூமி வாங்கி பல மாதங்கள் ஆகியும் இன்னும் வீடு கட்டிக் குடியேற முடியவில்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது தாமதங்கள் அகலும்.

### சனி சாரத்தில் கேதுவின் சஞ்சாரம் (10.05.2021 முதல் 16.01.2022 வரை)

உங்கள் இராசிக்கு 8, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான்.




அவரது சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது பணப்புழக்கம் அதிகரித்தாலும் மனக்குழப்பம் கூடுதலாகவே இருக்கும். அருகில் உள்ளவர்களின் ஆதரவு குறையலாம். அதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாக நேரிடும். உத்தியோகத்தில் வேலைப்பளு கூடும். வாகன மாற்றம் செய்ய விரும்புவர்கள் நன்கு ஆராய்ந்து முடிவெடுப்பது நல்லது. மனஉறுதி குறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய நேரமிது.

### குரு சாரத்தில் கேதுவின் சஞ்சாரம் (17.01.2022 முதல் 20.03.2022 வரை)

குரு பகவான், உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். களத்திர ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான குருவின்



சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். உங்கள் திறமை பளிச்சிடும். புகழ்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து புதிய திருப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பர். தகராறுகள் தானாக விலகும். 'மகப்பேறு கிட்டவில்லையே' என்று ஏங்கும் தம்பதியர்களுக்கு அதுவும் கைகூடும். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் ஏற்படும். வீடு மாற்றங்கள், அல்லது உத்தியோக மாற்றங்கள் முறைப்படி நிகழும். ஒருசிலர் விருப்ப ஓய்வில் வெளிவந்து சுயதொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர்.

### வளர்ச்சி தரும் வழிபாடு

12ஆம் இடத்து ராகுவால் பலன்கள் திருப்திகரமாகக் கிடைக்கவும், 6ஆம் இடத்து கேதுவால் சீரான வாழ்க்கை அமையவும் உளுந்து, கொள்ளு ஆகியவற்றை அனுகூல நாளில் தானமாக கொடுக்கலாம். தேய்பிறை அட்டமியில் இல்லத்து பூஜை அறையில் யோக வைரவருக்குரிய பாடலைப் பாடி வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

ராகு-கேது பெயர்ச்சியின் விளைவாக குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். உடல் ஆரோக்கியத்தில் சிறுசிறு பாதிப்புகள் வந்தாலும் அன்றாடப் பணிகளைச் செவ்வனே செய்வீர்கள். கணவன்-மனைவி இடையே அந்நியோன்யம் ஏற்படும். உறவினர்களால் சில தொல்லைகள் ஏற்படலாம். பிள்ளைகளின் திருமண முயற்சி கைகூடும். தாய்வழி ஆதரவு கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு இடமாற்றமும், சம்பள உயர்வும் கிடைக்கும். திருவாதிரை விரதமும், நடராஜர் வழிபாடும் நன்மை தரும்.

(தொடரும்)

# பாரதம்

# உலகளவில் அதிகூடிய தொற்றாளர்களை பதிவு

## ஒரு நாளில் மட்டும் 79 ஆயிரத்தை அண்மித்தது தொ

(டில்லி)

**இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து செல்கின்றது. அந்தவகையில் நேற்று முன்தினம் ஒரேநாளில் 78 ஆயிரத்து 169 பேர் புதிய தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.**

அத்துடன் ஆயிரத்து 25 பேர் புதிதாக உயிரிழந்துள்ளனர். இதனையடுத்து பாதிக்கப்பட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 37 இலட்சத்து 66 ஆயிரத்து 108 ஆக அதிகரித்துள்ளதுடன், உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 66 ஆயிரத்து 460 ஆக உயர்வடைந்துள்ளது.மேலும்குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 28 இலட்சத்து 99 ஆயிரமாக அதிகரித்துள்ள நிலையில், 8 இலட்சத்திற்கும் அதிகமானோர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (2)



# 71 ஆண்டுகளின் பின் அவுஸ்திரேலியாவில் பாரிய பொருளாதார நெருக்கடி

(கன்பரா)

கொரோனா வைரஸ் காரணமாக உலகின் பல நாடுகளில் பாரிய பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டுள்ள நிலையில், கடந்த 71 ஆண்டுகளில் அவுஸ்ரேலியாவில் பாரிய பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் முதல் ஜூன் மாதம் வரையிலான காலப்பகுதியில் அவுஸ்ரேலியாவில் மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதம் 7 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வீழ்ச்சியானது, கடந்த 1959 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பதிவாகியுள்ள மிகப் பெரிய பொருளாதார சரிவு என்பதுடன், இவ்வாண்டின் முதல் காலாண்டு பகுதியில் 0.3 வீத பொருளாதார சரிவு பதிவு செய்யப்பட்டிருந்தது.


ஒரு நாட்டில் இரு காலாண்டு பகுதிகளில் தொடர்ச்சியாக எதிர்மறை வளர்ச்சி ஏற்படுமாயின் அது அந்நாட்டின் பொருளாதார வீழ்ச்சியாக கருதப்படும்.

இந்நிலையில், உலகளாவிய ரீதியில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட 2008 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தன்து பொருளாதார இஸ்திரத்தன்மையினை தக்கவைத்துக் கொண்ட ஒரே நாடு அவுஸ்திரேலிய என்பது குறிப்பிடத்தக்கது. (2)




சர்வதேச வலிந்து காணாமல் ஆக்
கவனயீர்ப்புப் போராட்டம்.

# கொரோனா தொற்றுக்கு மத்தியிலும் திறக்கப்பட்ட பாடசாலைகள்



(பிரிட்டன்)

கொரோனாத் தொற்று நோய்க்கு மத்தியில் பிரான்ஸ், பெல்ஜியம் மற்றும் இங்கிலாந்து ஆகிய ஐரோப்பிய நாடுகளில் பாடசாலைகள் எச்சரிக்கையுடன் நேற்று முன்தினம் திறக்கப்பட்டன.

பல மாதங்களுக்குப் பின்னர் சிறுவர்கள் பெரும்பாலும் முகக்கவசங்களை அணிந்தவாறு பாடசாலைகளுக்குச் சென்றனர்.


எனினும் கொவிட்-19 தொற்று நோயின் இரண்டாவது அலைகளைத் தடுக்க கடுமையான சமூக இடைவெளி மற்றும் பிற பாதுகாப்பு நடவடிக்கைகள் பாடசாலைகளில் போதுமானதாக இருக்காது என மாணவர்களின் பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

ஆனால் சிறுவர்கள் தொடர்ந்து வீடுகளில் தங்க வைக்கப்படுவது ஆபத்தானது. இணைய வழிக் கற்றலுக்காக சிறுவர்களை வீட்டிலேயே வைத்திருப்பது வேலை செய்யும் பெற்றோருக்கு மிகப் பெரிய சுமையை ஏற்படுத்துகிறது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த சில மாதங்களாக தொற்று நோயால் சந்தித்த சவால்களை நான் குறைத்து மதிப்பிடவில்லை.

அதேநேரம் சிறுவர்கள் பாடசாலைக்குத் திரும்புவதும் மிகவும் முக்கியம். அவர்களின் கல்வி மட்டு மல்ல,அவர்களின் வளர்ச்சி மற்றும் நல்வாழ்விற்கும் வகுப்பறைக் கல்வி முக்கியமானது என பிரிட்டனின் கல்வித்துறை செயலாளர் கவின் வில்லியம் சன் தெரிவித்தார். (2)

# பட்டத்தில் சிக்கி




(தாய்வான்)

தாய்வானில் பட்டம் விடும் திருவிழாவின்போது பட்டத்தின் வாலில் சிக்கிய சிறுமி வானில் சுழற்றியடிக்கப்பட்ட சம்பவம் ஒன்று காண்போரை

# வெளிநாடு

## வு செய்யும் இந்தியா

## தொற்று எண்ணிக்கை






ல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு பிரித்தானியாவில் நடத்தப்பட்ட

## உலகின் மிகவும் ஆபத்தான பயங்கரவாதிகள் 400 பேரை விடுவிக்க ஆப்கான் அரசு முடிவு

### உலக நாடுகள் எதிர்ப்பு



(காபூல்)

உலகிற்கே ஆபத்தானவர்கள் என ஆப்கானிஸ்தான் ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்ட 400 தலிபான் பயங்கரவாதிகளையும் விடுதலை செய்யும் பணி தொடங்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஆப்கானிஸ்தானில் 2001 முதல் நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வர, அந்நாட்டு அரசின் உதவியோடு கடந்த பெப்ரவரியில் தலிபான் தீவிரவாதிகளுடன் அமெரிக்கா அமைதி ஒப்பந்தம் செய்து கொண்டது. குறித்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆப்கானிஸ்தான் பிராந்தியங்களில் இருந்து தனது படைகளை திரும்பப்பெற அமெரிக்கா ஒப்புக்கொண்டது.

ஆனால், ஆப்கானிஸ்தான் சிறை யில் உள்ள 5 ஆயிரம் பயங்கரவாதிகளை விடுதலை செய்ய வேண்டும் என தலிபான்கள் கோரிக்கை விடுத்தனர். இந்த கோரிக்கை நிறைவேற்றப்பட்டால்தான் ஆப்கானிஸ் தான் அரசுடன் அமைதி பேச்சு வார்த்தை நடத்த முன் வருவோம் எனவும் தங்கள் பிடியில் உள்ள 1,000 பேரை விடுவிப்போம் எனவும் தலிபான் பயங்கரவாதிகள் கெடு விதித்தனர்.

இதையடுத்து, ஆப்கானிஸ்தான் சிறையில் பலகட்டங்களாக 4,600 தலிபான் பயங்கரவாதிகள் விடுதலை செய்யப்பட்டனர். தலிபான்கள் பிடியில் இருந்த ஆப்கானிஸ்தான் வீரர்கள் பலரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஆனால் குறித்த ஒப்பந்தத்தின் பேரில் எஞ்சிய 400 பயங்கரவாதிகளை விடுதலை செய்ய ஆப்கானிஸ்தான் அரசு மறுப்பு தெரிவித்து வந்தது. இந்த பயங்கரவாதிகள் விடுதலைக்கு ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஷ்ரப்கானி எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமெரிக்க அதிகாரிகளுடன் வீடியோ அழைப்பின் மூலம் பேசிய அஷ்ரப், இந்த பயங்கரவாதிகள் நமக்கு மட்டுமல்ல இந்த உலகத்திற்கே ஆபத்தானவர்கள் என எச்சரிக்கை விடுத்தார்.

மேலும், சிறையில் உள்ள எஞ்சிய 400 பேரும் மிகவும் ஆபத்தானவர்கள்.

இவர்களில் 150 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு தண்டனை நிறைவேற்றப்படுவதற்காக காத்திருந்தவர்கள்.


44 பேர் அமெரிக்காவின் ஆபத்தானவர்கள் பட்டியலில் உள்ளவர்கள். இந்தப் பயங்கரவாதிகளில் பிரான்ஸ் மற்றும் அவுஸ்திரேலிய நாட்டினரை கொன்றவர்களும் உள்ளனர். இதனால் இந்த பயங்கரவாதிகளின் விடுதலைக்கு அந்த நாடுகளும் எதிர்ப்புத் தெரிவித்து வந்தன. பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியில் இந்த 400 பயங்கரவாதிகளையும் விடுதலை செய்ய ஆப்கானிஸ்தானின் முக்கிய தலைவர்கள் அனுமதியளித்தனர்.

ஆனால் பயங்கரவாதிகளை விடுதலை செய்வதில் காலதாமதம் ஏற்பட்டு வந்தது. இந்த நிலையில், பயங்கரவாதிகளில் சுமார் 200 பேரை ஆப்கானிஸ்தான் அரசு கடந்த திங்கட்கிழமை விடுதலை செய்துள்ளனர்.

பயங்கரவாதிகள் விடுதலை செய்யப்பட்டதை யடுத்து பதிலுக்கு தலிபான்கள் பிடியில் இருந்த ஆப்கானிஸ் தான் பாதுகாப்புப் படையின் கொமாண்டர்கள் 4 பேர் விடு தலை செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எஞ்சிய பயங்கரவாதிகளும் கூடிய விரைவில் விடுதலை செய்யப்பட்டு அமைதி பேச்சு வார்த்தை நடைபெறும் என ஆப்கானிஸ்தான் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

## க்கி அந்தரத்தில் பறந்த சிறுமி



பதற வைத்துள்ளது.

தாய்வானின் நான்லியோ கடற்கரையில், புகழ்பெற்ற பட்டம் விடும் திருவிழா நடைபெற்றது. திருவிழாவின்போது பட்டத்தின் வாலில் சிக்கிய சிறுமி வானில் சுழற்றியடிக்கப்பட்டார்.

மூன்று வயது சிறுமியே எப்படியோ பட்டம் ஒன்றின் வாலில் சிக்கியுள்ளாள். பட்டம் பறக்க, பட்டத்தின் வால் மேலெழும்ப, சுமார் 100 அடி உயரத்திற்கு அந்த சிறுமி கொண்டு செல்லப்பட்டார்.

பயந்து அலறினாலும், அவள் அந்த பட்டத்தை விடவில்லை. சிறுமியை ஒரு சுழற்று சுழற்றி வீசியபின் பட்டத்தின் வால் தரையை நோக்கி வர, காத்திருந்த மக்கள் அவளைப் பிடித்துக் கொண்டனர்.

சிறுமிக்கு சிறிய அளவில் காயங்கள் ஏற்பட்டுள்ளதால் சிறுமி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

இந்த அசம்பாவிதத்தைத் தொடர்ந்து பட்டம் விடும் திருவிழா உடனடியாக நிறுத்தப்பட்டது. (2)

## கண்டதும் சுட உத்தரவு
## இராணுவத்திற்குக் கட்டளையிட்ட கிம்

(பியாங்யாங்)

சீனாவுடனான வடகொரியாவின் எல்லையிலிருந்து அரை மைல் தூரத்திற்குள் தென்படும் எவரையும் கண்டதும் சுட்டுக் கொல்ல நாட்டின் இராணுவத்தினர் மற்றும் பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

வடகொரியாவில் கொரோனா பரவலை கட்டுக்குள் கொண்டு வரும் பொருட்டு, கிம் ஜாங் உன் இந்த அதிரடி உத்தரவை பிறப்பித்துள்ளார்.

கடுமையான இந்த புதிய நடவடிக்கையானது வியாழக்கிழமை நள்ளிரவில் நடைமுறைக்கு வருவதற்கு ஒரு நாளுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதனிடையே, வடகொரிய பொதுமக்கள் சீன எல்லை அருகே சென்றதற்கான காரணத்தைப் பொருட்படுத்தாமல் உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என ஹொரியோங் நகர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



இந்த கண்டதும் சுட உத்தரவானது சீனாவுடனான வடகொரியாவின் 880 மைல் தொலைவு எல்லைப்பகுதிக்கும் பொருந்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது மட்டுமின்றி எல்லைப்பகுதியில் உள்ள பொலிஸார் மற்றும் இராணுவ முகாம்களுக்கு தேவையான துப்பாக்கிக் குண்டுகளையும் வடகொரிய அரசாங்கம் லொறிகளில் அனுப்பி வைத்துள்ளது.

மேலும், துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளும் அதிகாரிகள் மீது துறை ரீதியான எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.


தற்போது கண்டதும் சுட உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில், சிறப்பு படைகளும் கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. (2)

# கோர விபத்தில் இரு இளைஞர்கள் பலி

## மட்டக்களப்பில் பதற்றம்

**(மட்டக்களப்பு)**

**மட்டக்களப்பு - மண்முனைப்பற்று தாழங்குடா பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் இருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.**



அக்கரைப்பற்றில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் பேருந்து மோட்டார் சைக்கிளுடன் மோதியமையால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. .

இந்த விபத்தில் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த இரு இளைஞர்களே உயிரிழந்துள்ளனர்.

இவ்விபத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் பெரும் பதற்ற நிலைமை ஏற்பட்டது. பொது மக்களினால் பேருந்து தாக்கப்பட்ட நிலையில் பேருந்து சாரதியும் நடத்துநரும் தப்பிச்சென்றுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

இவ்விபத்துத் தொடர்பான விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஐ-4)

## மர்மமான முறையில் மகன் பலி

# சட்டமா அதிபருக்கு பிரிட்டன் தாய் கடிதம்



(லண்டன்)

இலங்கையில் கொலை செய்யப்பட்ட தனது மகனின் வழக்கை விரைவுபடுத்துமாறு கோரி பிரித்தானியாவில் உள்ள தாய் ஒருவர் சட்டமா அதிபர் டப்புல டி லிவேராவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இந்த வழக்கு தற்போது நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரவுள்ளது.

37 வயதான சார்லஸ் ஜீவன் என்பவர் போதைப் பழக்கத்திற்கு சிகிச்சை பெறுவதற்காக 2017 ஆம் ஆண்டு நவம்பரில் இலங்கைக்கு வந்தார்.

அவுஸ்திரேலிய மறுவாழ்வு மையத்தின் இலங்கை கிளையான களுத்துறையில் அமைந்துள்ள சீசன்ஸ் லங்கா மறுவாழ்வு மையத்தில் இந்த சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

எனினும் 2018 ஆம் ஆண்டு ஜனவரியில் கொழும்பில் உள்ள பூங்காவில் மர்மமான முறையில் சார்லஸ் இறந்து கிடந்தார்.

அவர் இறந்த சில நாட்களுக்குப் பிறகு, மறுவாழ்வு மையம் மூடப்பட்டது மற்றும் சிகிச்சையில் உள்ள ஏனையவர்கள் அந்தந்த நாடுகளுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

அதேநேரத்தில் அவுஸ்திரேலிய ஊழியர்கள்இலங்கையை விட்டு வெளியேறியதாகவும் தெரியவந்துள்ளது.

இந்த மரணம் கொலை என்ற கோணத்தில் நடத்தப்பட்டு தற்போது விசாரணையில் உள்ளது.

இந்த நிலையில் உயிரிழந்த சார்லஸ் ஜீவனின் தாயார் மகனின் மரணத்திற்கு நீதி கோரியுள்ளார்.

அத்துடன் தான் அனுப்பிய கடிதத்தில் இந்த வழக்கை உயர்நீதிமன்றத்திற்கு மாற்றும்படியும் கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ-4)

# நீரில் மூழ்கிய வீதிகள்



(காலி)

நாட்டில் நேற்று முன்தினம் பெய்த கனமழையால் காலி பகுதியில் உள்ள பல வீதிகள் நீரில் மூழ்கிக் காட்சியளிக்கின்றன.

அம்பலன்வத்த - காலி, காலி -பத்தேகம வீதி உள்ளிட்ட பல வீதிகளே இவ்வாறு நீரில் மூழ்கியுள்ளன. (ஐ-4)

## ஒருவர் கொலை

(கொழும்பு)

மாத்தறை - பஸ்கொட பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இருவருக்கு இடையில் இடம்பெற்ற வாய்த்தகராறு முற்றியதில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்த மோதலின் போது காயமடைந்த மேலும் இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தாக்குதலை மேற்கொண்ட நபரும் காயமடைந்த நிலையில் பொலிஸ் பாதுகாப்புடன் கம்புறுப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## எது என்னுடையது?

ஒரு காட்டில் ஒரு குரு இருந்தார். அவரிடம் சந்நியாசிகள் நிறையப்பேர் இருந்தார்கள்.

ஒரு நாள் இரவு ஒரு சந்நியாசியைக் கூப்பிட்டார்.

"நீ உடனே அரண்மனைக்குச் போ.., அரசனின் அவையிலிருந்து அறிவைப் பெற்றுக்கொண்டு வா" என்றார்.

"குருவே இந்த ஆசிரமத்தில் கற்றுக் கொள்ள முடியாததையா அரண்மனையில் கற்றுக்கொள்ளப் போகிறேன்..." என்றார் அவர்.

"பேசாமல் நான் சொல்வதைக் கேள்... மற்றதெல்லாம் அங்கே போய் அரசனைக் கேட்டுக்கொள்" என்றார் குரு.

வேறு வழியே இல்லை. அந்தச் சந்நியாசி அரண்மனைக்குப் போய் சேர்ந்தார். அங்கே போய் பார்த்தால் இவருக்கு அதிர்ச்சி. ஏன் என்றால் அங்கே எல்லோரும் மது மயக்கத்தில் நடனமாடிக் கொண்டிருந்தார்கள்.

இந்தச் சந்நியாசிக்கு மிகவும் சங்கடமாகப் போய்விட்டது.

நமது குரு இப்படி நம்மை அவமானப்படும்படியாக ஆக்கிவிட்டாரே... என்று நினைத்தார்.

இருந்தாலும் அரசன் இவரை வரவேற்று உபசரித்தான்.

"நீங்கள் கண்டிப்பாக இன்றைக்கு இரவு இங்கே தங்க வேண்டும்..." என்று கேட்டுக்கொண்டான்.

"இன்றைக்கு இரவு இங்கே நான் தங்குவது அர்த்தமில்லாத செயல்" என்றார் சந்நியாசி.

இருந்தாலும் அரசன் விடுவது போல் தெரியவில்லை...

"நீங்கள் நாளைக்குக் காலையில் குளித்துவிட்டு சாப்பிட்டுவிட்டுப் போகலாமே" என்றான். "சரி" என்று சொல்லி சந்நியாசி அங்கேயே தங்கினார். அன்றைக்கு இரவு அவருக்குத் தூக்கமே வரவில்லை. "இந்த இடத்தில் நான் எப்படி ஞானத்தைப் பெற முடியும்?" என்று ஆச்சரியமாக யோசித்துப் பார்த்தார்.

காலையில் எழுந்த உடனே அரசன் அவரிடம் வந்தான்.

"அரண்மனைக்குப் பின்னால் உள்ளே நதியில் குளித்துவிட்டு வரலாம்... வாருங்கள்" என்று கூப்பிட்டான். இரண்டு பேரும் போய் அங்கே குளித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

அந்தச் சமயத்தில் திடீரென்று பயங்கரக் கூச்சல். என்னென்று பார்த்தால் அரண்மனை தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. அரசன் சந்நியாசியைப் பார்த்து... "அதோ பார்த்தீர்களா..." என்று காட்டினான். சந்நியாசி நிமிர்ந்து பார்த்தார்... வானளாவிய தீப்பிழம்புகள் அவ்வளவுதான்... உடனே அந்த அரண்மனையை நோக்கி ஓட ஆரம்பித்தார்.

"எதற்காக அங்கே ஓடுகிறீர்கள்?" என்று கேட்டான் மன்னன். அங்கே அரண்மனையிலே என்னுடைய துணி ஒன்று இருக்கிறது... அது எரிந்துவிடப் போகிறது என்ற அவசரத்தில் ஓடுகிறேன் என்று சொல்லிக்கொண்டு ஓடினார்.

அப்படி அவர் ஓடிக்கொண்டிருக்கும் போதே அவருக்குள்ளே ஒரு யோசனை.

"ராஜாவுடைய அரண்மனையே தீப்பிடித்து எரிகிறது. ஆனால் அவர் அங்கே நதியில் நின்றுகொண்டிருக்கிறார்... ஆனால் நான்...என்னுடைய சின்னத் துணி ஒன்று எரிந்துவிடப் போகிறது என்பதற்காக ஓடிக்கொண்டிருக்கிறேன்" இப்படி நினைத்தார். உடனே திரும்பி வந்தார்.

அங்கே தண்ணீரில் நின்றுகொண்டே சிரித்துக்கொண்டிருந்தான் மன்னன். அவன் காலில் விழுந்தார் சந்நியாசி.

பின்னர் கேட்டார், "அங்கே உங்கள் அரண்மனையே தீப்பற்றி எரிகிறது... நீங்கள் இப்படி நிற்கிறீர்களே... இதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லையே" என்றார்.

இப்போது அந்த அரசன் சொன்னான், "நான் அந்த அரண்மனையை என்னுடையதாகக் கருதியிருந்தால் இந்நேரம் இங்கே நின்றுகொண்டிருக்க மாட்டேன். அரண்மனை என்பது அரண்மனை. நான் என்பது நான்.

நான் பிறப்பதற்கு முன்னரே அரண்மனை இருந்தது. நான் இல்லாமல் போன பிறகும் அரண்மனை இருக்கும். அப்புறம் அது எப்படி என்னுடையதாக இருக்க முடியும்? நீங்கள் அந்தத் துணியை உங்களுடையதாகவும் அரண்மனையை என்னுடையதாகவும் நினைத்தீர்கள்...அதனால் அதன் பின்னால் ஓடுகிறீர்கள்" என்றான். சந்நியாசிக்குத் தெளிவு ஏற்பட்டது.

மனிதன் தன்னுடைய நோக்கத்தினாலேயே அடிமையாகிறான் என்பது ஓஷோவின் கருத்து. அந்த நோக்கத்தை மாற்ற வேண்டும். இல்லை என்றால் தகர்க்க வேண்டும்... அப்படிச் செய்தால் விடுதலை பெறமுடியும் என்கிறார் அவர்.

நமது ஆள் ஒருவனைக் கேட்டேன்.

"ஏனப்பா உங்கள் பக்கத்து வீடு தீப்பிடித்து எரிகிறது என்று செய்தி வந்தால்... உடனே நீ என்ன செய்வாய்?" என்றான்.

"உடனே அடுத்த தெருவுக்கு ஓடுவேன்... அங்கே இருக்கும் என் மச்சானைக் கூட்டிட்டுக்கொண்டு ஓடிவருவேன்" என்றான்.

"ஏன்?" என்று கேட்டேன். "அவன் இதுவரைக்கும் தீ விபத்தையே பார்த்ததில்லையாம்... அதனாலே" என்றான்.

# இராசிபலன்

03.09.2020
ஆவணி 18. வியாழக்கிழமை
பிரதமை பிற்பகல் 12.26 மணிவரை
பூரட்டாதி முன்னிரவு 9.39 மணிவரை
சுபநேரம் 7.35 - 9.05 மணிவரை
இராகுகாலம் 1.35 - 3.05 மணிவரை
சந்திராஷ்டமம்- ஆயில்யம், மகம் வளவன்


மேஷம்

எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.


ரிஷபம்

இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, புதிய முயற்சிகள் கைகூடும், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், அரசு வழிச்சலுகைகள் கிடைக்கலாம்.


மிதுனம்

கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர்.


கடகம்

உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், கடவுளை வழிபட்டு காரியம் சாதிக்க வேண்டிய நாள்.


சிம்மம்

புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், சொந்தபந்தங்களின் ஒத்துழைப்பால் சிந்தை மகிழ்வீர்கள், தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும்.


கன்னி

எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே கிடைக்கும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள்.


துலாம்

புண்ணி காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, புதிய தொழில் தொடங்க எடுத்த முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு.


விருச்சிகம்

செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்கள் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.


தனுசு

தெய்வ அனுகூலத்தால் சிறப்புக்கள் வந்து சேரலாம், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, குடும்பத்தில் குதூகலம் இடம்பெறலாம்.


மகரம்

வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், தொலைபேசி வழியில் வரும் செய்திகள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.


கும்பம்

போசன சுகமுண்டு, வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும்.


மீனம்

பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம், தூரதேசத்திலிருந்து வரும் செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

எல்லாப் போர்களுக்கும் முடிவு சமாதானமே.

# பிரேமலால் ஜயசேகரவுக்குப் பதிலாக பாராளுமன்றம் செல்லப்போவது யார்?

## வரலாற்றில் இடம்பிடிக்கப்போகும் நிகழ்வு

(கொழும்பு)
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இரத்தினபுரி மாவட்டத்தில் இருந்து பாராளுமன்றத்துக்குத் தெரிவாகி இருக்கும் பிரேமலால் ஜயசேகரவுக்கு பாராளுமன்ற உறுப்பினராகச் செயற்படுவதற்கான தகுதி இரத்தாகினால் பட்டியலில் அடுத்ததாக அதிக விருப்பு வாக்குகளைப் பெற்ற வேட்பாளரைக் குலுக்கல் முறையில் தெரிவு செய்யும் நிலை ஏற்படும்.

அவ்வாறு இடம்பெற்றால், அது இலங்கை வரலாற்றில் இடம்பெறும் முதலாவது சந்தர்ப்பமாகும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2015 இல் மேற்கொள்ளப்பட்ட மனித படுகொலை ஒன்றுக்காக பிரேமலால் ஜயசேகரவுக்கு இரத்தினபுரி மேல் நீதிமன்றத்தினால் கடந்த ஜுலை மாதம் 31 ஆம் திகதி மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்திருந்தது.

என்றாலும் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் பிரேமலால் ஜயசேகர விருப்பு வாக்கு பட்டியலில் இரண்டாம் இடத்தை பெற்று பாராளுமன்றத்திற்குத்



தெரிவாகி இருந்தார்.

இந்நிலையில் பிரேமலால் ஜயசேகரவைப் பாராளுமன்றத்துக்கு அழைத்து வருமாறு சபாநாயகர் கடந்த வெள்ளிக்கிழமை சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்துக்குத் தெரிவித்திருந்தார்.

மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் ஒருவர் மக்கள் பிரதிநிதியாக செயற்படுவது தொடர்பாகச் சிறைச்சாலைச் சட்ட ஏற்பாடுகளில் எதுவும் இல்லை எனத் தெரிவித்து, சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் இது தொடர்பாக நீதி அமைச்சிடம் விளக்கம் கோரி இருந்தார்.

இது தொடர்பாக நீதி அமைச்சு சட்டமா அதிபரின் நிலைப்பாட்டை கேட்டிருந்தது. அதன் பிரகாரமே அரசியலமைப்பின் பிரகாரம் பிரேமலால் ஜயசேகர பாராளுமன்ற உறுப்பினராக செயற்பட தகுதி இல்லை என சட்டமா அதிபர் நீதி அமைச்சு மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு அறிவித்திருக்கின்றார்.

அதனடிப்படையில் பிரேமலால் ஜயசேகரவுக்கு பாராளுமன்ற ஆசனம் இல்லாமல் போகுமானால், அடுத்ததாக அந்த இடத்துக்கு வருவது, விருப்பு வாக்கு பட்டியலில் பாராளுமன்ற சந்தர்ப்பம் கிடைக்கப் பெறாத, கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்ற வேட்பாளராவார்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் பாராளுமன்ற ஆசனத்துக்கு குலுக்கல் மூலம் தெரிவாகும் உறுப்பினரே தகுதியானவராகக் கருதப்படுவாரெனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்திருக்கின்றது. குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் நிலை ஏற்பட்டால் அது வரலாற்றில் இடம்பெறும் முதலாவது சந்தர்ப்பமாகும். (ஜ-4)

# நாட்டின் பல மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை

(கொழும்பு)
நாட்டின் நான்கு மாவட்டங்களுக்கு முதலாம் கட்ட மண்சரிவு எச்சரிக்கையான மஞ்சள் நிற எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசியக் கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலி மாவட்டத்தின் நியாகம பிரதேச செயலாளர் பிரிவுக்கும் இரத்தினபுரி மாவட்டத்தின் எஹெலியகொட பிரதேச செயலாளர் பிரிவுக்கும் கேகாலை மாவட்டத்தின் தெஹியோவிட்ட மற்றும் யட்டியாந்தோட்டை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் களுத்துறை மாவட்டத்தின் மத்துகம, வலல்லாவிட்ட, இங்கிரிய, அகலவத்த, ஹொரணை மற்றும் புளத்சிங்ஹள ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், நாட்டின் 2 மாவட்டங்களுக்கு இரண்டாம் கட்ட மண்சரிவு எச்சரிக்கையான செம்மஞ்சள் நிற எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காலி மாவட்டத்தின் எல்பிட்டிய, நாகொட மற்றும் பத்தேகம பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் களுத்துறை மாவட்டத்தின் பாலிந்தநுவர பிரதேச செயலாளர் பிரிவுக்கும் செம்மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அனர்த்தங்கள் மற்றும் மின்னல் தாக்கங்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு, மக்கள் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் தேசியக் கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# டிஜிற்றல் மயமாகிறது கொழும்பு பங்குச் சந்தை


(கொழும்பு)
கொழும்பு பங்குச் சந்தையை எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் டிஜிற்றல் மயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கு அமைய இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கிடையிலான கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது, கொழும்பு பங்குச் சந்தையை டிஜிற்றல் மயப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் நிறைவு பெற்றுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்தது.

அத்துடன், கொரோனா தாக்கம் காரணமாக பங்குச் சந்தையின் நடவடிக்கைகள் 52 நாட்கள் முடங்கியிருந்ததாகவும்



பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதன் காரணமாக, கொழும்பு பங்குச் சந்தையை டிஜிற்றல் மயப்படுத்துவதன் மூலம், பங்குச் சந்தை நடவடிக்கைகளை புதிய உத்வேகத்துடன் முன்னெடுக்க முடியும் எனவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஜ-4)



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

58

## கலாநிதி முருகர் குணசிங்கம்

பேராசிரியர் சுரேஸ் கனகராஜா லண்டன், கனடா, வடஅமெரிக்காவில் 2008 ஆம் ஆண்டில் மேற்கொண்ட வெளிக்கள ஆய்வு மூலம் (Survey) தெளிவாக அறிய முடிகிறது.

அவரது ஆய்வின் முக்கியமான பகுதியை இவ்விடத்தில் மேற்கோள் காட்டுவதன் மூலம் மேற்படி நாடுகளில் உள்ள நிலைமையை மிகத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும்.

**மொழி மாறுபாடும் குடும்பமும் புலம் பெயர் ஈழத்தமிழர்களின் கேள்விகள் சுரேஷ் கனகராஜாவின் நேர்காணல்.**

இளம் தறைமுறையினரின் போக்குகளை ஒப்புநோக்குகையில் மேற்கூறப்பட்ட மூன்று இடங்களில் குழந்தைகள் தெளிவாக ஆங்கிலத்தை நோக்கி நகர்ந்து செல்வதை எனது கணக்கெடுப்பு வெளிப்படுத்துகின்றது.

ஏனைய நாடுகளில் வாழும் குழந்தைகளை விட லண்டனில் வாழும் குழந்தைகளில் அதிகம் பேர் (42.5%) இரு மொழிகளிலும் சமமான புலமை கொண்டுள்ளதாகக் கூறிக்கொண்டாலும் இங்கேயும் ஆங்கிலத்தில் அதிக புலமை உள்ளதாகக் கூறும் குழந்தைகளின் எண்ணிக்கை அதைவிடச் சற்றுக் கூடுதலாகவே உள்ளது.

இந்த மூன்று இடங்களிலும் குழந்தைகள் தங்கள் பெற்றோரைக் காட்டிலும் ஆங்கிலத்தில் அதிகபட்ச புலமையுடனும் தமிழில் குறைந்த அறிவுடனும் இருக்கின்றார்கள்.

குடும்பத்திற்குள்ளான மொழித் தேர்வில் குழந்தைகள் தங்கள் உடன் பிறந்தோருடன் உரையாடுவதற்கு தங்கள் பெற்றோரும் அவர்களின் பெற்றோரும் தங்கள் வயதை ஒத்த நபர்களுடன் (பிற பெற்றோர் மற்றும் அவர்களின் பெற்றோர்) பயன்படுத்துவதை விட அதிகம் ஆங்கிலத்தைப் பயன்படுத்துகின்றனர்.

எடுத்துக்காட்டாக ரொறண்ரோவில் தங்களுக்குள் பேசிக்கொள்ள ஆங்கிலத்தையோ அல்லது தமிழ் கலந்த ஆங்கிலத்தையோ பயன்படுத்தியதாக 82.1 விழுக்காடு குழந்தைகள் தெரிவித்து உள்ளனர்.

இருப்பினும் அவர்களது பெற்றோர் தங்களுக்குள் பேசிக்கொள்ளத் தமிழையே அதிகம் பயன்படுத்தினர். ஒப்பீட்டளவில்.77.6 விழுக்காட்டினர் தமிழையும் 2.5 விழுக்காட்டினர் ஆங்கிலத்தையும் 19.9 விழுக்காட்டினர் இரு மொழிகளையும் கலந்தும் பயன்படுத்தினர்.

மேலும் தங்கள் உடன் பிறந்தோருடன் உரையாட 84.7 விழுக்காட்டினர் தமிழையே தேர்ந்து எடுத்தனர். பெற்றோரின் பெற்றோரைப் பொறுத்தவரை தங்களுக்குள் பேசிக்கொள்ள 77.5 விழுக்காட்டினரும் தங்கள் சகோதரர்களுடன் பேச 95.9 விழுக்காட்டினரும் தமிழையோ மொழிகளின் கலவையையோ பயன்படுத்தினர்.


குழந்தைகளுடனான எனது நேர்காணல்களில் மொழி மாற்றம் மிக வேகமாக நடைபெறுகிறது என்பது தெளிவானது.

ஆங்கில மொழி ஆதிக்கத்தில் அதிகம் உள்ளதாகக் கூறிய பலர் கிட்டத்தட்ட ஆங்கிலம் தங்கள் ஒற்றைப் பேச்சு மொழி என்றும் தமிழ் மொழியில் இருந்து குடும்ப உறவு பெயர்கள் மற்றும் உணவுப் பொருட்கள் போன்ற சில எளிய வார்த்தைகளைக் கடன் பெற்றுப் பயன்படுத்துவதாகவும் கூறினர்.

தங்களது ஐந்து அல்லது ஆறு வயதில் பெற்றோருடன் புலம்பெயர்ந்த குழந்தைகள் சில ஆண்டுகளிலேயே தமிழ் பேசுவதை நிறுத்தி விட்டதாக என்னிடம் கூறினர்.

அவர்கள் இளைஞர்களாக இருந்த போது நான் அவர்களை நேர்காணல் செய்தபோது அவர்கள் தங்களது தமிழ் புலமையை இழந்து விட்டனர்.

கீழ்க்காண்பவை கிழக்கு லண்டனில் சந்திரா என்ற பதினாறு வயதுப் பெண்ணிடம் நான் செய்துகொண்ட நேர்காணலின் ஒரு பகுதி.



**கேள்வி:** நீங்கள் உங்களை ஒரு தமிழராகக் கருதிக் கொள்கின்றீர்களா?

**சந்திரா:** ஆமாம் நான் என்னை ஒரு ஈழத்தமிழராகவே கருதுகிறேன். ஆனால்... நான் இங்கே தமிழ் பேசுவது இல்லை. நான் ஆறு வயதில் இங்கே வந்தேன்.

சிறுவயதில் சரளமாகப் (தமிழில்) பேசினேன். எழுதவும் படிக்கவும் முடிந்தது. நான் இங்கே வந்தபோது என்னால் ஆங்கிலத்தில் ஒரு வார்த்தை கூடப் பேச முடியவில்லை.

ஆனால் இப்போது எனது நண்பர்கள் அனைவரும் பெரும்பாலும் தமிழர் அல்லாதவர்கள் தான். உண்மையில் நான் வீட்டில் கூட இப்போது தமிழ் பேசுவது இல்லை.

மேற்படி விபரங்களின் அடிப்படையில் ஆங்கில மொழி பேசுகின்ற நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்கள் அவர்களின் இளம் தலைமுறையினர்களும் எந்த அளவிற்குத் தமிழில் தேர்ச்சியையும் அறிவையும் பெற்று உள்ளார்கள் என்பதையும் இனி வரப்போகும் இரண்டாவது மூன்றாவது இளம் தலைமுறையினரின் தமிழ் மொழி ஆற்றல் எந்த அளவிற்கு இருக்கப் போகின்றது என்பதையும் ஊகிக்க முடிகிறது.

ஆங்கில மொழி பேசும் நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்கள் தங்களுடைய மிக முக்கிய கடமையாக தங்கள் பிள்ளைகளைத் தமிழ் பாடசாலைகளுக்கு அனுப்பி அவர்களைத் தமிழ் மொழியில் தேர்ச்சி பெற வைக்க வேண்டும்.

அத்தோடு வீட்டிலும் தங்களால் முடிந்த வரை தமிழ் கற்பிக்க வேண்டும். ஏற்கனவே கலந்து உரையாடியது போல் தமிழ் பாடசாலைகளிலும் அரச பாடசாலைகளிலும் வாரத்தில் சில மணி நேரங்கள் மட்டும் கற்பிக்கப்படும் தமிழ் மொழியால் அவர்களது பிள்ளைகள் தமிழ் மொழியில் முழுமையான தேர்ச்சியினைப் பெற முடியாது.

ஆனால் வீட்டில் தமது பிள்ளைகளுடன் தமிழில் தொடர்ந்து பேசுவதன் மூலமும் தொடர்ச்சியாக ஒவ்வொரு நாளும் சில மணி நேரங்களாவது அவர்களுக்குத் தமிழ் மொழியைக் கற்பிப்பதன் மூலமும்தான் அவர்களை தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றவர்களாக உருவாக்க முடியும்.

மேற்கண்ட பாடசாலைகளும் கல்வி நிறுவனங்களும் பெற்றோர்களும் ஒருங்குசேர முயற்சிப்பதன் மூலமே தமது பிள்ளைகளைத் தமிழ் மொழியில் பேச, எழுத, வாசிக்கக் கூடியவர்களாக ஆக்க முடியும்.

ஆங்கில மொழி பேசுகின்ற நாடுகளில் வாழும் எதிர்கால இளம் தலைமுறையினர் தமது மொழி அடையாளத்தை இழக்க வேண்டிய நிலை ஏற்படக் கூடிய வாய்ப்புகள் நிறையவே காணப்படுகின்றன.

அவர்களின் தாய், தந்தையர்களின் கைகளிலேயே எதிர்காலச் சந்ததியினரின் தமிழ் மொழி ஆற்றலும் அதன் மூலம் அவர்கள் தமது தேசிய அடையாளத்தையும் பாதுகாக்கின்ற நிலைமையும் உள்ளன.

ஈழத்தமிழர்களின் சமூக அரசியல் வாழ்வில் பிரித்தானியர்களின் ஆளுகை பல்வேறுபட்ட தாக்கங்களையும் விளைவுகளையும் ஏற்படுத்தியது.

முதன்மையாக ஆங்கில மொழி பாரிய தாக்கத்தை ஏற்படுத்திற்று. ஆனால் சீனாவில் பிரித்தானியாவின் தாக்கம் அவ்வளவு ஆழமாக இடம்பெறவில்லை.

எனவே சீனர்கள் தமது மொழியையே வீட்டிலும் பொது இடங்களிலும் பெருமையோடு பேசி வருவதைக் காண முடிகிறது.

ஆனால் ஈழத்தமிழர்கள் போக்கு அதற்கு மாறாகவே காணப்படுவது மிகவும் கவலைக்கு உரியது. வியட்நாமியர்கள், கொரியர்கள், பிலிப்பைன்ஸ் நாட்டினர், புலம்பெயர்ந்த நாடுகளில் சீனர்களைப்போல் தமது மொழியிலேயே பேசுவதைக் காண முடிகிறது.

இலங்கையை விட இந்தியாவில் பிரித்தானியர்களின் சமூக மொழி, அரசியல் தாக்கங்கள் மிகவும் ஆழமாகக் கால் ஊன்றி இருந்தும் புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள இந்தியர்கள் தத்தமது மாநில மொழிகளிலேயே அன்றாடம் பேசுவதையும் அவதானிக்க முடிகிறது.

ஆனால் ஆங்கில மொழி நடைமுறையில் உள்ள நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்கள் குறிப்பாக தம்மை மேல் வர்க்க, மத்திய வர்க்க வகுப்புகளைச் சார்ந்தவர்கள் என்று பெருமிதம் கொள்ளும் அவர்களால் ஏன் தமிழ் மொழியைப் பயன்படுத்த முடியுவில்லை என்ற கேள்வி எழுவது நியாயமானது.

இதனைப்பற்றி ஒரு கல்விமானிடம் இக்கட்டுரையாசிரியர் கலந்துரையாடும்போது "அவர்கள் தமக்கு வாழ்க்கையில் எல்லாம் கிடைத்து விட்டது. தாம் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் இந்நாடுகளில் வாழ்கிறோம். எங்கள் குடும்பங்கள் முழுவதுமே வெளிநாடுகளுக்கு வந்து விட்டன. எங்கள் பிள்ளைகளுக்கும் மேலும் இரு தலைமுறையினருக்கும் சேர்க்க வேண்டிய சொத்துகக்களையெல்லாம் ஏற்கனவே சேர்த்து விட்டோம் என்ற ஒரு குறுகிய (Parochial attitude) குடும்ப வட்டத்தினை உள்ளடக்கிய மனநிலையே காரணம் ஆகும் என்றார்.

அத்துடன் நாடு, மொழி, இனம் என்ற உணர்வுகளை மழுங்கடிக்கின்ற வகையில் வக்கிரமான வர்க்க புத்தி அவர்களை ஆட்டிப் படைக்கிறது.

அவர்கள் அடிமைத்தனத்தின் சின்னங்களாகவே இருக்கின்றார்கள் என்று நான் சொல்லுவதையும் நிச்சயம் நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என்றார்.

(தொடரும்)

# புதிய அரசியலமைப்பு தொடர்பில் கட்சிகளுடன் கலந்துரையாட வேண்டும்



(கொழும்பு)

அரசியலமைப்பு தொடர்பாக அனைத்து கட்சிகளுடனும் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசியலமைப்பு தொடர்பாக அனைத்துக் கட்சிகளுடனும் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தி கட்சிகளின் கருத்துக்களைக் கேட்டறிந்து கொண்டு, அரசியலமைப்பில் ஒரு மாற்றம் தேவை எனில், அரசியலமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தலாம்.

அல்லது மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருப்பதால், அரசாங்கம் சுயாதீனமாகவும் இந்த விடயத்தில் செயற்படலாம்.

அரசாங்கம் இந்த விடயத்தில் எவ்வாறான செயற்பாடுகளை மேற்கொண்டாலும், அது மக்களைத் தான் சாரும் என்பதை மறந்துவிடக்கூடாது" என அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

## வெள்ள நீரை வெளியேற்றுவதற்கான அபிவிருத்தித்திட்டங்கள் இறுதிக்கட்டத்தில்

(கொழும்பு)


கொழும்பில் வெள்ளநீரை வெளியேற்றுவதற்காக அரசாங்கம் முன்னெடுத்து வருகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கொழும்பில் வெள்ள நிலைமைக்கு தீர்வு காண்பதற்காக தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக இருந்த வேளை பல வேறு திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் குறித்த காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட 55 அபிவிருத்தித் திட்டங்களில் 45 திட்டங்கள் தற்போது நிறைவடைந்ததையடுத்து மிகுதியாக காணப்படும் 10 அபிவிருத்தித் திட்டங்களையும் விரைவாக நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகள் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறித்த அபிவிருத்தித் திட்டங்களின் மொத்தப் பெறுமதி 3 ஆயிரத்து 450 மில்லியனென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-6)



பட்டதாரிகளிற்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்களாக வவுனியா அரச அதிபர் சமன் பந்துலசேன, மேலதிக அரச அதிபர் திரேஸ்குமார், பிரதேச செயலாளர்களான க.சிவகரன், இ.பிரதாபன், நா.கமலதாசன் மற்றும் பிரதி தேர்தல் ஆணையாளர் லலித் ஆனந்த ஆகியோர் கலந்து கொண்டனர்.

( படங்கள்: நெளுக்குளம் செய்தியாளர்)

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம்

## சாட்சியத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட பிள்ளையான்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் இன்று வியாழக்கிழமை சாட்சியமளிப்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர் பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் மட்டக்களப்பு சிறையில் இருந்து கொழும்புக்கு நேற்றுக் காலை பலத்த பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கில் கடந்த 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் 11 ஆம் திகதி கைது செய்யப்பட்டு தடுப்புக் காவல் சிறையிலுள்ள சிவநேசதுரை சந்திரகாந்தன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.



இந்த நிலையில் பிள்ளையான் இன்று உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளிப்பதற்காக நேற்றைய தினம் மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்து விசேட அதிரடிப்படையினரின் பலத்த பாதுகாப்புடன் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். (ஜ-4)

## மூன்று நாட்டவர்களுக்கு மலேசியாவிற்குள் நுழையத்தடை

(கோலாலம்பூர்)

இந்தியா உட்பட மூன்று நாட்டவர்கள் மலேசியாவிற்குள் நுழையத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தியா, இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாட்டவர்கள் செப்டெம்பர் 7 ஆம் திகதிக்குப் பின்னர் மலேசியாவிற்குள் நுழையத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய மூன்று நாடுகளிலும் கொவிட்-19 தொற்று பரவல் அதிகரித்து செல்வதால் இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளது. (ஜ-10)

## ஐக்கிய அரபு எமிரேட்ஸ் வெடிப்புச் சம்பவத்தில் இலங்கைப் பிரஜை உயிரிழப்பு

(அபுதாபி)

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் அமைந்துள்ள உணவகமொன்றில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் இலங்கைப் பிரஜையொருவர் உயிரிழந்துள்ளார். மாத்தறை பகுதியைச் சேர்ந்த ரங்கன சமித் என்பரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தலைநகர் அபுதாபி மற்றும் அதன் சுற்றுலா மையமான டுபாயில் இரண்டு தனித்தனியான வெடிப்பில் கடந்த திங்கட்கிழமை மூன்று பேர் கொல்லப்பட்டனர் மற்றும் பலர் காயமடைந்ததாக அந் நாட்டு பொலிஸ் மற்றும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## பதிவு செய்வதற்காக 150 கட்சிகள் விண்ணப்பம்

(கொழும்பு)

இவ் ஆண்டுக்கான அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்காக 150 கட்சிகள் விண்ணப்பித்துள்ளன என சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் சட்ட பணிப்பாளர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

விண்ணப்பிக்கப்பட்டுள்ள 150 கட்சிகளில் 70 கட்சிகள் ஏற்கனவே உள்ளவை என அவர் சுட்டிக்காட்டியதுடன், விண்ணப்பித்துள்ள கட்சிகளில் 40 விண்ணப்பங்கள் அடிப்படை ஆவணங்களைக் கூட பூர்த்தி செய்யாமையால் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

விண்ணப்பித்துள்ள கட்சிகளினால் ஒப்படைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் விரைவில் நேர்முகத்தேர்வினை நடத்தி கட்சிகள் பதிவு செய்யப்பட்டதன் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் விபரங்களை ஆணைக்குழு வெளியிடும் எனவும் நிமல் புஞ்சிஹேவா சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

## கண்டியில் மீண்டும் நில அதிர்வு

(கண்டி)

கண்டி-பல்லேகல பிரதேசத்தில் நேற்று மீண்டும் சிறியளவு நில அதிர்வு ஒன்று பதிவாகியுள்ளதென புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

நேற்றுக் காலை 7.06 அளவில் இந்த அதிர்வு பதிவாகியுள்ளதாகவும் பணியகம் தெரிவித்துள்ளது.

இது நில அதிர்வா அல்லது வேறு ஏதாவது காரணங்களால் ஏற்பட்டதா என்பது தொடர்பில் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் இது குறித்து ஆய்வுகள் இடம்பெற்றுவருவதாகவும் புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது. (ஜ-4)

# அமெரிக்கக் குடியுரிமையை நீக்கிவிட்டு பசில் பாராளுமன்றத்திற்கு வரலாம்

## விமல் அறிவுரை





(கொழும்பு)

இரட்டைக்குடியுரிமை கொண்டுள்ள நபர்களை பல நாடுகள் அரச ஆட்சி நிர்வாக செயற்பாடுகளில் சம்பந்தப்படுத்திக் கொள்வதில்லை என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொரதொட்ட- துன்ஹத ஹேன பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றின் பின்னர் ஊடங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதனால், அமெரிக்க குடியுரிமையை இரத்து செய்த பின்னர், முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ மீண்டும் பாராளுமன்றத்திற்கு வர முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இரட்டை குடியுரிமை கொண்டுள்ள நபர்கள் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படுவதை தடுக்கும் 19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை நீக்கி விட்டு, முக்கிய அமைச்சு பதவியை பசில் ராஜபக்ஷவுக்கு வழங்க அரசாங்கம் திட்டமிட்டு வரும் நிலையில் அமைச்சர் விமல் வீரவன்ச இந்த கருத்தை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# தனிமைப்படுத்தலிலிருந்த 400 பேர் வீடுகளுக்கு

(கொழும்பு)

நாட்டில் மேலும் 400 பேர் தனிமைப்படுத்தலை நிறைவு செய்து நேற்றையதினம் தமது வீடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

நாட்டின் சில தனிமைப் படுத்தல் மத்திய நிலையங்களில் தனிமைப்படுத்தலை நிறைவு செய்த 400•பேர் தமது வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என கொவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் கற்பிட்டி, பூஸா, இரணைமடு, புனானை உள்ளிட்ட தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் இவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில் இவ்வாறு அனுப்பப்பட்டுள்ளனர்.

இதற்கமைய இதுவரை நாடு முழுவதும் 35 ஆயிரத்து 338 பேர் தனிமைப் படுத்தலை நிறைவு செய்துள்ளனர்.

அத்துடன் நாட்டில் இயங்கிவரும் 70 மத்திய நிலையங்களில் மேலும் 7 ஆயிரத்து 990 பேர் தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தக் கட்டுள்ளனர். (ஜ-6)

# ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் மத்தும- ஆசு மாரசிங்க முன்னிலை





(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் விசாரிக்க நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் முன்னாள் அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான ஆசு மாரசிங்க ஆகியோர் நேற்று ஆஜராகினர்.

கடந்த சில நாட்களாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு அதிகாரிகள் பல அரசியல்வாதிகளை விசாரண்ணக்கு உட்படுத்தியுள்ளனர்.

முன்னாள் ஜனா திபதி மைத்திரிபால, சிறிசேன ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2104

### யது




மூச்ச நல்லா இழுத்து விடுங்கோ...

### கயா

தோசைய நின்னுக்கிட்டே ஊத்தனும்.
ஆனா கால் வலிக்கும்
இட்லிய ஊத்திட்டு உட்கார்ந்துக்கலாம்
ஆனா நிறைய பாத்திரம் கழுவனும்..
துன்பம் எதில்தான் இல்ல..?

### பிரியா



ஒரு பறவை
உயிருடனிருக்கும்
போது எறும்பை சாப்பிடுகிறது

பறவை இறந்தபோது
எறும்பு தின்கிறது

நேரமும் சூழ்நிலையும்
எந்த நேரமும் மாறலாம்

### சுதீஸ்



சுமையில்லா புத்தகப்பை வேண்டும் சுவையான பாடங்கள் வேண்டும் அடிக்காத ஆசிரியர் வேண்டும் செடியோடு பேச வேண்டும் துள்ளி விளையாட வேண்டும் பள்ளிக்கு போகனும்னா சந்தோஷம் மலர வேண்டும்

### ராஜன்



காலம் என்பது நம்பிக்
கைகளின் தொட்டில்
ஆசைகளின் கல்லறை
முட்டாள்களுக்குக் கற்றுத்
தரும் குரு புத்திசாலி
களுக்கு ஆலோசகன்!!

### ரிஷி



சேர்த்து வைப்பது
நல்ல பழக்கம்னு
சொல்லிட்டு
இப்போ
நீயே என்
உண்டியல்
காசெல்லாம்
எடுத்துட்டியேப்பா!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# உதிரிப்பாகங்கள் இறக்குமதி என்ற போர்வையில் வாகனங்களை கடத்திய கும்பல் கைது

(கொழும்பு)

ஜப்பானில் இருந்து உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்யும் போர்வையில் நாட்டிற்குள் வாகனங்களை கடத்திய கும்பலை பேலியகொட குற்றத் தடுப்புப்பிரிவினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

இறக்குமதி செய்யப்பட்டு கம்பஹாவின் மரிஸ்வத்தாவிலுள்ள கினிகாமா பகுதியில் வாகன நிறுத்துமிடத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பிராடோ ஜீப், ஒரு கார் போன்ற வாகனங்களையும் கைப்பற்றியுள்ளனர். கைப்பற்றப்பட்ட வாகனங்களின் பெறுமதி 100 மில்லியன் ரூபா மதிப்புடையது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-6)





## ஆன்மீகம்

### சிரித்த முகம் தரும் சிறப்பான வாழ்வு

(நேற்றைய தொடர்ச்சி...)

அதனால்தான் நம்மவர்கள் பைந்தமிழில் உள்ள 'முகம்' என்ற சொல்லையே அதிகமாகப் பயன்படுத்தாமல் பழகு தமிழில் உள்ள மூஞ்சி என்ற சொல்லையே முக்கியப்படுத்திக் கூறுகிறார்கள். நம் முகம் 'மூஞ்சியாக' மாறிவிட நாம் அனுமதித்தால் நம் உறவும், நட்பும் நம்மைவிட்டு ஓடிவிடும். ஆறுமுகம் கொண்ட முருகப் பெருமானை ஆராதிக்காத பக்தர்களே இருக்க மாட்டார்கள். அவரின் முகங்கள் ஆறையும் முதன்மைப்படுத்தி முத்து முத்தாகச் சொல் அடுக்குகிறார் அருணகிரிநாதர்:

**ஏறு மயில் ஏறி விளையாடும் முகம் ஒன்றே**
**ஈசனுடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்றே**
**கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே**
**குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே**
**மாறுபடு சூரரை வைத்த முகம் ஒன்றே**
**வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே**
**ஆறுமுகம் ஆன பொருள் நீயருளல் வேண்டும்**
**ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே!**

இந்தத் திருப்புகழ்ப் பாடலை 'கந்தன் கருணை' என்ற தம் சொற்பொழிவில் நிறைவாகச் சொல்லி முடித்தார் ஒரு சொற்பொழிவாளர். கேட்டுக்கொண்டிருந்த பக்தர்களில் ஒருவர் அவர் பக்கத்தில் வந்து கேட்டார்:

ஐயா, கருணை மிகுந்த முருகன் தனக்கு மட்டும் ஆறுமுகங்களை வைத்துக் கொண்டு நமக்கெல்லாம் ஒரு முகத்தைக் கொடுத்தது ஏன்?' சொற்பொழிவாளர், 'நமக்கெல்லாம் ஒரு முகத்தையே ஆறுமுகங்களாக வகுத்துள்ளாரே வடிவேலன்!' என்று பதிலளித்ததோடு விளக்கமும் அளித்தார்:

**சினந்து கொள்வதும், சீறி வருவதுமென்று இருந்தால் அவர் சிடுமூஞ்சி!**
**அழுது புலம்புபவன் அழுமூஞ்சி!**
**தூங்கு வழிபவன் தூங்குமூஞ்சி!**
**'உர்'என்று முகத்தை வைத்திருப்பவன் 'குரங்கு மூஞ்சி'**
**உதடுகள் இரண்டையும் பசை போட்டு ஒட்டி வைத்திருப்பவன் உம்மணாம் மூஞ்சி"**
**எதற்கெடுத்தாலும் ஏக்கப் பெருமூச்சு விடுபவன் 'விடியா மூஞ்சி'**

ஆறு மூஞ்சிகளின் பட்டியலில் நாம் இணைந்து விடாமல் இருக்க ஆறுமுகப்பெருமான்தான் நமக்கெல்லாம் அருள வேண்டும். சிரித்த முகத்துடன்தானே பேச வேண்டும். பழக வேண்டும் என்பதற்காக நெஞ்சத்தில் வஞ்சம் வைத்து போலியான புன்சிரிப்பை உதடுகளில் படர விடலாமே என்று எண்ணி விடாதீர்கள். 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பதை மறந்து விடாதீர்கள்.

உருவத்தைக் காட்டுவது கண்ணாடி. நம் உள்ளத்தைக் காட்டுவதுதான் முகம். அடுத்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம் என்கிறார் திருவள்ளுவர். நம் இதயமெனும் புத்தகத்தில் இருப்பவை என்னென்ன என்பதைக் காட்டும் பொருளடக்கப் பகுதிதான் நம்முகம்!

ரயில்பெட்டியில் நம் எதிரில் ஒருவர் தன் குழந்தைகளோடு அமர்ந்திருக்கிறார் என்றால் அந்தக் குழந்தையைப் பார்த்து நாம் கை அசைக்கிறோம். கண் சிமிட்டுகிறோம். கொஞ்சிப் பேசுகிறோம். நம்மை மாதிரியே சக பயணிகளும் குழந்தையைப் பார்த்துக் குதூகலம் அடைகிறார்கள்.

காரணம் என்ன? குழந்தைகளின் சிரித்த முகம்தான்! கள்ளம் கபடமற்ற வெள்ளை உள்ளம் கொண்டவை குழந்தைகள். அதனால்தான் அந்த மலர்ந்த முகம் எல்லோர் மனதையும் கவர்கிறது. எந்த அலங்காரமும் இல்லாமல் அரையாடையுடன், ஏன் பற்களே இல்லாமல் சிரித்த வண்ணம் விளங்கிய ஒருவர்தான் நம் நாட்டு மக்களின் இதயங்களில் எல்லாம் நிரந்தரமாக அரசோச்சுகின்றார். அந்த போர்பந்தர் புனித மகாத்மாவின் பொக்கைவாய் சிரிப்பிற்கு முன் புவனத்தின் அழகெல்லாம் மண்டியிடுகிறதே! எனவே சிறந்த அழகு சிரிக்கும் முகம்தான்!

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தலுவாகொடுவ பிரதேசத்தில் 300 கிராம் ஹெரோயினுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். நீர்கொழும்பு விஷ போதைப்பொருள் பிரிவின் அதிகாரிகளுக்கு நேற்று முன்தினம் கிடைக்கப்பெற்ற தகவல் படி குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஜ-4)

# விபத்தில் ஐவர் படுகாயம்



(பதுளை)

பதுளை - மகியங்கனை - சொரணதொட்ட பகுதியில் இடம்பெற்ற விபத்தில் விரிவுரையாளர்கள் ஐவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது. இவ் விபத்து தொடர்பில் தெரியவருவதாவது, விரிவுரையாளர்கள் பயணித்த கார் வீதியை விட்டு விலகி 40 அடி பள்ளத்தில் வீழ்ந்தமையால் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இச் சம்பவத்தில் பெண் விரிவுரையாளர்கள் நால்வரும் ஆண் விரிவுரையாளர் ஒருவரும் இவ்வாறு படுகாயமடைந்த நிலையில் பதுளை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 200 | 160 | 200 |
| தக்காளி | 160 | 130 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 100 | 80 |
| கோவா | 100 | 180 | 160 |
| கரட் | 120 | 160 | 200 |
| பூசணி | 50 | 110 | 120 |
| புடோல் | 100 | 120 | 100 |
| வாழைக்காய் | 180 | 140 | 120 |
| சின்ன வெங்காயம் | 250 | 110 | 140 |
| பெரிய வெங்காயம் | 100 | 130 | 130 |
| பாகற்காய் | 180 | 300 | 200 |
| வெண்டிக்காய் | 120 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 150 | 180 | 160 |
| பயுற்றங்காய் | 160 | 200 | 160 |
| லீக்ஸ் | 150 | 120 | 120 |
| பீற்றூட் | 120 | 80 | 120 |
| கறிமிளகாய் | 100 | 280 | 300 |
| முருங்கைக்காய் | 200 | 350 | 200 |
| போஞ்சி | 220 | 300 | 300 |
| கத்தரிதம்புள்ள | 150 | 80 | 100 |
| கீரை - 1 பிடி | 40 | 20 | 30 |
| தேசிக்காய் | 400 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 300 | 60-80 |
| இராசவள்ளி | 200 | -- | -- |
| வெங்காயப்பூ | -- | 210 | 200 |
| முள்ளங்கி | 80 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 30 |
| ஈரப்பலா | 60 | 80 | 100 |




## தெனாலிராமன் வளர்த்த பூனை

ஒருமுறை மன்னர் கிருஷ்ண தேவராயர் அரண்மனையில் உள்ளவர்களிடம் ஆளுக்கு ஒரு பூனைக் குட்டியைக் கொடுத்து வளர்க்கச் சொன்னார்.

அதற்கு அரண்மனையிலிருந்து அவர்களுக்குத் தினமும் பால் கொடுக்கப்பட்டது.

சில மாதங்களுக்குப் பிறகு எல்லோரும் பூனைகளை எவ்வாறு வளர்த்துள்ளனர் என்பதை அறிய எல்லோரும் தங்கள் பூனைகளைக் கொண்டு வருமாறு மன்னர் உத்தரவிட்டார்.

அனைவரின் பூனையும் கொழுகொழுவென்று இருந்தன.

ஆனால் தெனாலிராமனின் பூனை மட்டும் எலும்பும் தோலுமாக இருந்தது. ஏன் இப்படி உள்ளது என்று மன்னர் கேட்டார்.

அதற்கு, என்ன செய்வேன் மன்னா, என் பூனை பால் அருந்தமாட்டேன் என்கிறது என்று தெனாலிராமன் சொன்னார்.



மன்னரால் நம்ப முடியவில்லை. எங்கே பால் கொண்டு வாருங்கள் என்று சொன்னார். பால் அந்தப் பூனை முன்னே வைக்கப்பட்டது. அந்தப் பாலைக் கண்டதும் அந்தப் பூனை குதித்தோடியது. என்ன நடந்தது. ஏன் பூனை இப்படி ஓடுகிறது என்று மன்னர் விசாரித்தார்.

அப்போதுதான் தெரிந்தது. தெனாலிராமன் முதல் நாளிலேயே பாலை கொதிக்க வைத்து அதை அப்படியே பூனைக்கு வைத்திருக்கிறார்.

அதைக் குடிக்க முயன்றதும் பூனை சூடு தாங்க முடியாமல் ஓடிவிட்டது.

அதுவே வழக்கமாகி விட்டது. பூனைக்கு வைத்த பாலை தெனாலி ராமன் அருந்தி வந்துள்ளார்.


# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## இலங்கையில் பறந்த புலிக்கொடி!

ஆனால் படையெடுப்புகளால் சோழர்களுக்குச் சுலபமான அயல்வணிகம் சாத்தியமானது.

சோழநாடு தன் உற்பத்தியை அதிகரித்தபோது கடல் வணிகம் என்பது கட்டாயமானது. வணிக வழிகள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் இருந்தால்தான் பிரச்சினை இல்லாமல் வணிகத்தைப் பெருக்க முடியும் என்று நம்பினார் ராஜராஜன்.

சிக்கலில்லாமல் அயல் வணிகத்தில் ஈடுபடவே வேங்கை, கலிங்கப் போர்களில் சோழர்கள் ஈடுபட்டதாக வரலாற்றாசிரியர்கள் கருதுகிறார்கள்.



நிக்கோபார் தீவுகள் போன்ற பகுதிகளிலிருந்து சோழநாட்டுக்குப் பொருட்கள் கடல் வழியாக வந்தன

சீனா, சுமாத்ரா, இலங்கை, நிக்கோபார் தீவுகள் போன்ற பகுதிகளிலிருந்து சோழநாட்டுக்குப் பொருட்கள் கடல் வழியாக வந்தன. கும்பகோணம் அருகே திருவலஞ்சுழி என்கிற இடத்தில் அரசுக்குதிரை வாணிபர்களுக்குத் தனிக்குடியிருப்பு இருந்தது.

தென்னிந்தியத் துணிகள் பெரிதளவில் (அப்போதே) ஏற்றுமதி செய்யப்பட்டன. சோழர்கள் கடல் கடந்து குடியேற்றங்களை நிகழ்த்தவில்லை.

ஆனால் கடல் வாணிபத்தில் அவர்கள் பெரிதளவில் வெற்றி கண்டார்கள்.

ராஜராஜன் ஆட்சியின் இறுதிக் கட்டத்தில் கடல் வாணிபம் தொடர்பாகச் சீனாவுடன் ஒரு நல்லுறவு ஏற்பட்டது. சீனாவுடன் கடல் வாணிபம் செய்வதற்காகப் பல உயர்ந்த பொருட்களைப் பரிசாக அனுப்பினார் ராஜராஜன். சோழர்கள் அங்கு சென்றிருந்த சமயம் சீன மன்னரின் பிறந்தநாள் என்பதால் கொண்டாட்டத்தில் சோழர்களும் கலந்து கொண்டார்கள்.

இதனால் சீனாவுடனான கடல் வாணிபம் சீராக அமைந்தது என்று சீன நூல்கள் வழியாகத் தெரிய வருகிறது.

ராஜராஜனின் தொடர் வெற்றிகளான காந்தளூர்ச்சாலை, வேங்கி, கங்கபாடி, நுளம்பபாடி, தடிகைபாடி, குடமலைநாடு, கொல்லம், கலிங்கம், ஈழம், இரட்டபாடி, ஏழரை இலக்கம், முந்நீர்ப்பழந்தீவுகள், உதகை எனப் பெரும்பகுதியை ராஜராஜனின் படைகள் வளைத்த விபரங்கள் அவர் காலத்துக் கல்வெட்டுக்களில் நீக்கமற நிறைந்திருக்கின்றன.

இவ்வளவு நாடுகளிலும் சோழநாட்டுப் புலிக்கொடி பறந்திருக்கிறது. காவேரி நதிக்குக் கரையெடுத்த கரிகாலசோழன் காலத்தில்கூட சோழப் பேரரசு இவ்வளவு பெரிய மகோன்னதத்தை அடைந்தது கிடையாது.

இதுபோன்ற பல்வேறு போர் வெற்றிகளின் வழியாகக் கிடைக்கின்ற செல்வங்களைச் சேமித்து வைக்க மூலரத்ன பண்டாரம் என்கிற அமைப்பை ஏற்படுத்தினார் ராஜராஜன்.

நவமணிகள், பொன் அணிகலன்கள், முத்து, பவளம் போன்ற உயர்ரக நகைகளைச் சேர்த்து வைக்க அவர் இக்கருவூலத்தை ஏற்படுத்தினார்.

போர்கள் மூலமாக ராஜராஜனுக்குப் பெரிய வெற்றிகள் கிடைத்தாலும் போர்களால் மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளானதும் உண்டு. சாளுக்கியர்களின் கல்வெட்டுக்களின்படி சோழர்களுடனான போரினால் துங்கபத்திரை நதியின் இரு பக்கங்களிலும் உள்ள மக்கள் பெரிதும் துன்பப்பட்டார்கள்.

போரின்போது கண்ணியமான நடைமுறைகள் காற்றில் பறக்கவிடப்பட்டன என்றும் பெண்கள் அதிகப் பாதிப்புக்கு உள்ளானார்கள் என்பன போன்ற விபரங்களும் தெரியவருகின்றன.

அதேசமயம் வெளிநாட்டுப் படையெடுப்புக்களின் மூலம் நிறையப் பொன்னும் பொருளும் கிடைத்தன. போரினால் கிடைக்கப்பெற்ற பொன்னும் பொருளும் மக்களுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

தனது 6 ஆவது ஆட்சியாண்டில் சீப்புலி, பாகி ஆகிய பகுதிகளைக் கைப்பற்றிய ராஜராஜன் அங்கு கிடைத்த தொள்ளாயிரம் ஆடுகளைக் காஞ்சிபுரத்தில் உள்ள துர்க்கையம்மன் கோயிலுக்குத் தானமாகக் கொடுத்தார்.

(தொடரும்)

எல்லா ஆற்றல்களும் உன்னுள்ளே குடி கொண்டி ருக்கின்றன. உன்னால் எதையும் சாதிக்க முடியும்.
- சுவாமி விவேகானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கட்சி சாராத அரசியலை தமிழ் மக்கள் அறிமுகம் செய்ய வேண்டும்

இது எனது கட்சி. என் தந்தை, அவர் தந்தை எனத் தொன்று தொட்டு இந்தக் கட்சியே எங்களுடையது என்ற அரசியல் கட்சிப் பண் பாடு இனிப் பொருத்தமில்லை என்பதை ஏற் றுத்தானாக வேண்டும்.

ஒரு காலத்தில் தொகுதி வாரியாகப் பாராளு மன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ட போது கட்சி ஆதரவு என்பது ஏற்புடையதாக இருந்தது.

ஆனால் இவர் எங்கள் தொகுதிப் பாராளு மன்ற உறுப்பினர் என்ற நிலைமை மாறி, விகி தாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறைமை நடைமுறைக்கு வந்த பின்னர்,

விருப்பு வாக்குகளே பாராளுமன்ற உறுப் பினர்களைத் தெரிவு செய்கின்றது.

இவ்வாறான நிலைமையில் ஒரு கட்சிக் கான ஆதரவு என்ற நிலைமைகள் தன்னிச் சையான செயல்பாட்டுக்கும் சர்வாதிகாரப் போக்குக்கும் வழிசமைப்பதாக உள்ளது.

இஃது மக்களுக்கு ஆரோக்கியமான தல்ல என்ற நிலையில், கட்சிக்கான ஆதர வின்றி மக்களுக்கு சேவை செய்யக்கூடிய வர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும் அவர் களைத் தெரிவு செய்தல் என்ற புதியதொரு அரசியல் பண்பாடு நடைமுறைக்கு வருகின் றது.

இப் புதிய அரசியல் பண்பாடு முறைமை தென்னிலங்கையில் அமுலாகியுள்ளது.

இந்த அமுலாக்கத்தினூடாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி என்ற இரு பிரதான தேசியக் கட்சிகள் தத்தம் ஆதர வாளர்களை இழந்து நிற்பதைக் காண முடி யும்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பொதுஜன பெரமுனவுடன் சேர்ந்து பயணிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இதில் ஐக்கிய தேசியக் கட்சி முற்று முழு தாகத் தனது ஆதரவாளர்களை இழந்து கடந்த பொதுத் தேர்தலில் ஓர் ஆசனத்தைக் கூடப் பெற முடியவில்லை.

மாறாக, ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறிய சஜித் பிரேமதாஸ தலைமையில் உருவான ஐக்கிய மக்கள் சக்தி எதிர்பார்த் ததைவிட கூடிய ஆசனங்களைப் பெற்றுள் ளது.

ஆக, நாங்கள் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி யின் ஆதரவாளர்கள் அல்லது ஐக்கிய தேசி யக் கட்சியின் ஆதரவாளர்கள். ஆகையால் அந்தக் கட்சிகளை விட்டு நாங்கள் ஒரு போதும் விலகமாட்டோம் என்ற முன்னைய நிலைப்பாடுகள் இப்போது சிதறுண்டு கட்சி ஆதரவு என்ற மரபு கடந்து, செயல்திறன் மிக்கவர்கள் எங்குள்ளனரோ அவர்களுக்கு வாக்களிப்பது என்ற நிலைமை தென்பகுதி அரசியலில் அமுலாகியுள்ளது.

எனினும் எங்கள் தமிழர் தாயகத்தில் அதன் அமுலாக்கம் இயங்க ஆரம்பித்து விட்டதையும் அதன் அறிகுறியே கடந்த பொதுத் தேர்தல் முடிவுகள் என்பதையும் நாம் சுட்டிக் காட்ட முடியும்.

எனினும் இங்கு ஒரு விடயத்தை நாம் கூறித்தானாக வேண்டும்.

அதாவது தமிழ் மக்கள், கட்சி ஆதரவு என்ற கலாசாரத்தை விலத்தி நின்று வாக் களித்திருந்தாலும் வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றவர்கள் மக்களின் மனநிலையை உணர்ந்து கொள்ளாமல், தங்கள் கட்சிகளுக் குக் கிடைத்த ஆதரவாகவே அதனைக் கருதுகின்றனர்.

இதன் விளைவு மீண்டும் கட்சி அரசியல் கலாசாரம் ஏற்படப் பார்க்கிறது என்பதால் அடுத்த தேர்தலில் தமிழ் மக்கள் கட்சி அரசி யல் என்பதற்கு தக்க பாடம் புகட்டி, உரியவர் களுக்கு மெய்ஞானத்தைப் போதிக்க வேண் டும்.

மெய்ஞானம் என்பது தோல்வியால் ஏற் பட்டதான வரலாறுகளே அதிகம்.

# நாட்டை முன்னேற்றுவதற்கு அரசியலமைப்பு திருத்தமொன்று கொண்டு வரப்படவேண்டும்

## இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர கோரிக்கை

(கொழும்பு)

நாட்டை முன்னேற்ற வேண்டுமெனில், அரசி யலமைப்பில் திருத்த மொன்று கொண்டுவரப்பட வேண்டும் என மாகாண சபைகளுக்கான இரா ஜாங்க அமைச்சர் சரத் வீர சேகர தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளி க்கும் போதே அவர் இவ் வாறு குறிப்பிட்டுள் ளார்.

இதன்போது தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், "19 ஆவது திருத் தச்சட்டத்தின் ஊடாக, நாடு எந்தளவு பிரச்சி னைகளை சந்தித்தது என்பதை நாம் அனை வரும் அறிவோம். இத னால், இதனை மாற்றிய மைக்க வேண்டியது முக் கியமான பொறுப்பாகவே காணப்படுகிறது.

இந்த நாட்டை முன் னேற்ற வேண்டு மெனில், அரசியலமைப்பில் திருத் தமொன்று கொண்டு வர ப்பட வேண்டும்.இதனை தான் அரசாங்கம் என்ற ரீதியில் நாம் மேற் கொள்ள முயற்சித்து வரு கின்றோம்" எனக் குறிப் பிட்டுள்ளார். (ம-03)

## சித்தன்கேணியில் விபத்து மூன்றுபேர் படுகாயம்

(அராலி)

சித்தன்கேணி சந்தி க்கு அருகில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் விபத்துக்குள்ளாகியதில் மூவர் படுகாயம் அடைந் துள்ளனர்.

நேற்று இரவு 8 மணி யளவில் சித்தன்கேணி யில் இருந்து பண்டத்தரி ப்பை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் பண்டத்தரிப்பிலிருந்து சித்தன்கேணி நோக்கி பயணித்த மோட்டார் சை க்கிளும் சித்தன்கேணி சந்திக்கு அருகில் விபத் துக்குள்ளாகியதில் மூவர் படுகாயமடைந் துள்ளனர். இதில் ஒருவரது நிலை மிகவும் கவலைக்கிடமாக காணப்படுகிறது.

இதில் பண்டத்தரிப் பினைச் சேர்ந்தவர்களான திருஞானதீபன் (வயது 20), ரஞ்சன் (வயது 28) என்ப வர்களும் சங்கானை யைச் சேர்ந்த பிரதீப் (26) என்பவருமே இவ்வாறு படுகாயமடைந்துள்ளனர்.

இவர்கள் மூவரும் சிகி ச்சைகளுக்காக நோயாளர் காவுவண்டி மூலம் யாழ் போதனா வைத்தியசா லைக்கு எடுத்துச் செல்லப் பட்டனர்.

இது தொடர்பான மேல திக விசாரணைகளை வட் டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின் றனர். (ம-03.104)

## கள்ளமண் ஏற்றிவந்த சாரதி யாழில் கைது

(யாழ்ப்பாணம்)

அனுமதிப்பத்திர மின்றி யாழ்ப்பாணத்தில் இருந்து மணல் ஏற்றி வந்த வாகனத்தினை தாம் கைப்பற்றியுள்ள தாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்த னர். இந்தசம்பவம்நேற்று காலை இடம் பெற்றுள் ளது.

மண்டைதீவு பகுதி யில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சந்தேகத்துக்கிடமான முறையில் வந்த ஹன் ரர் வாகனத்தை மறித்து சோதனை மேற்கொண் டனர்.

இதன்போது அனும திப்பத்திரமின்றி மணல் ஏற்றி வந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சாரதியினை ஊர்காவ ற்துறை நீதவான் நீதி மன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது. (ம-03)

## கழகங்களுக்கிடையே மோதல் வவுனியாவில் இருவர் காயம்

(வவுனியா)

வவுனியா செட்டிக்கு ளம் பிரதேச செயலக பிரி வுக்குட்பட்ட காந்திநகர் பகுதியில் இரு கழகங் களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் இருவர் காய மடைந்துள்ளனர்.

குறித்த சம்பவம் காந் திநகர் விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றுள்ளது.

இரு கழகங்களுக்கி டையே மென்பந்து கிரிக் கெட் சுற்றுப்போட்டி இடம் பெற்ற சமயத்தில் குறித்த இரு கழக அணியின ருக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகல ப்பாக மாறியதில் இருவர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த இருவ ரும் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள னர். (ம-03.250)

## கசிப்புடன் இருவர் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாயவ னூர் பகுதியில் சட்டவி ரோத கசிப்பு விற்பனை யில் ஈடுபட்ட இருவர் நேற்று முன்தினம் கைது செய் யப்பட்டனர்.

மாயவனூர் பகுதியில் மோட்டார் சைக்கிளில் இருவர் சந்தேகத்திற் கிட மான முறையில் பயணி த்த இருவரையும் மடக் கிப் பிடித்துச் சோதனை யிட்டதில் அவர்களிடமி ருந்து 36 லீற்றர் கசிப்பும் மோட்டார்சைக்கிளும் பொலிஸாரால் கைப்பற் றப் பட்டதுடன் சந்தேக நபர் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர் கள் இன்று கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப் படவுள்ளதாக தருமபுரம் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி சிசெர தெரிவித்தார். (5-4-316)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

பலவற்றை காட்டுவதுதான் மனதின் வேலை. அவற்றுள் ஏதாவது ஒன்றைத் தேர்வு செய் வதுதான் அறிவின் வேலை. நம் செயலுக்கு முதன்மையானது அறிவுதான். அறிவை நம்பித் தான் செயலில் இறங்கவேண்டுமே தவிர விருப் பங்களை நம்பியல்ல. - பகவத்

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற் றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்க ளின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக் காக நாளை 04 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியி லிருந்து பிற்பகல் 1 மணி வரை கிளிநொச்சி பிர தேசத்தில் பரந்தன், உமையாள்புரம், ஆனை யிறவு, ஆனையிறவு உப் பளம் ஆகிய இடங்க ளி லும் காலை 8 மணியிலி ருந்து மாலை 5 மணி வரை வவுனியா பிரதே சத்தில் பம்பைமடுவி லிருந்து குருக்கள் புதுக்கு ளம் வரை, பூவரசங்கு ளத்திலிருந்து செங்கற் படை, வேலங்குளம் கடற்படை முகாம், பம் பைமடு பல்கலைக்கழ கம், வவுனியா பல்கலைக் கழகம், ஆண்டியப் புளி யங்குளம், நித்தியநகர் ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும்.

## சத்திய தரிசனம்

### தன்னம்பிக்கை வேண்டும்



❖ ஆட்சியாளரைப் பின்பற்றியே மக்களும் செல்வர்கள். சட்டத்தை உருவாக்குபவர்கள் அத ற்கு கீழ்ப்படிதல் வேண் டும்.

❖ மெய்யும், பொய் யும் இணைந்த சிக்க லான கலவையே இந்த உலகம். நாம் பகுத்தறி வுடன் செயற்பட்டு உண் மையை அறிய முயற் சிக்க வேண்டும்.

❖ மிருகம் போல வெறுமனேவாழ்தல்கூடாது. மனிதன் அறிவைப் பயன்படுத்தி மேம்பட்ட நிலைக்கு தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டும்.

❖ உலகில் ஒரே ஒரு சமயம் மட்டுமே இருக்கிறது. அது அன்பு என்னும் சமயம் தான். எல்லா உயிர் களையும் நேசித்து வாழப் பழகுங்கள்.

❖ ஒருவரிடத்தில் செல்வம் வந்து போகும். ஆனால், ஒழுக்கமோ போனால் அது மீண்டும் திரும்புவது கடினம்.

❖ மிருக உணர்ச்சியைக் களைந்து விடுங்கள். அதற்குப் பதிலாக மனம் முழுவதும் தெய்வீக உணர் வால் நிரப்புங்கள்.

❖ தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள். அது கவசம் போல எப்போதும் பாதுகாப்பு அளிக்கும்.

# பிரதேச செயலகங்களுக்கிடையிலான பெண்கள் கரப்பந்தாட்ட போட்டி

## தெல்லிப்பழை பிரதேச செயலக அணி சம்பியன்

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்தி சம்பியனாகியது.

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான போட்டிகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி மோதியது.

இதில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 25:9, 25:10 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியனாகியது. (4-60)



**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## மகளிர் துடுப்பாட்டப் போட்டி
## ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகம் 2 ஆம் இடம்



மகளிர் துடுப்பாட்டத்தில் இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்டது ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக்கழகம். கடந்த 29 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற பெண்களுக்கான துடுப்பாட்டச் சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டியில் ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக்கழகமும் கந்தரோடை இளைஞர் கழகமும் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகம் 5 ஓவர்கள் நிறைவில் 65 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கந்தரோடை இளைஞர் கழகம் 4.3 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்தது. இதன்படி இரண்டாம் இடத்தை ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக்கழக மகளிர் அணி பெற்றுக் கொண்டது. (4)

## கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

2020 ஆம் ஆண்டு ஜனாதிபதி தங்கக் கோப்பைக்கான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி ஆண், பெண் இருபாலாருக்குமான திறந்த போட்டியாக நடைபெறவுள்ளது.

சுற்றுப்போட்டியில் பங்குபெற விரும்பும் கழகங்கள், மாகாண இணைப்பாளர் கி.மனோகரனிடம் (186/26 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்) விண்ணப்பப்படிவங்களை பெற்று எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்து கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (5-4).

# நொதேன் பிறீமியர் லீக்
# 2k20
## கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போட்டிகள்



- சாவா ஸ்பாட்டன்ஸ் எதிர் யாழ்.அரோஸ்
- சாவா ஸ்பாட்டன்ஸ் - 78/09
- யாழ்.அரோஸ் - 79/07
- யாழ்.அரோஸ் 3 இலக்குகளால் வெற்றி
- ஆட்ட நாயகன் - சேந்துஜன் - 19 ஓட்டங்கள்



- கொக்குவில் ஸ்ரார்ஸ் எதிர் ஊரெழு றோயல்ஸ்
- கொக்குவில்ஸ்ரார்ஸ் - 94/09
- ஊரெழு றோயல்ஸ் - 41/09
- கொக்குவில் ஸ்ரார்ஸ் 53 ஓட்டங்களால் வெற்றி
- ஆட்டநாயகன் அபிசாந்தன் 20 ஓட்டங்கள்



- ஜப்னா றோயல்ஸ் எதிர் கொக்குவில் ஸ்ரார்ஸ்
- ஜப்னா றோயல்ஸ் - 64/10
- கொக்குவில்ஸ்ரார்ஸ் - 55/08
- ஜப்னா றோயல்ஸ் 9 ஓட்டங்களால் வெற்றி
- ஆட்டநாயகன் - பிரதீப் 3 இலக்குகள்

## 14 மாவட்டங்...

டுள்ளது.

நாட்டை அண்மித்து நிலவும் தாழமுக்க நிலை காரணமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம், குருநாகல், கண்டி, கேகாலை, இரத்தினபுரி, கம்பஹா, கொழும்பு, களுத்துறை, காலி ஆகிய 14 மாவட்டங்களும் "அதி அபாயகரமான" நிலையில் உள்ளதால் வளி மண்டலவியல் திணைக்களம் இந்தச் சிவப்பு எச்சரிக்கையை விடுத்துள்ளது.

சில இடங்களில் 200 மில்லி மீற்றருக்கும் அதிக மழை பெய்யும் எனவும், மணிக்கு 70 முதல் 80 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 16 மணிநேரத்தில் களுத்துறை, காலி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் பெருமளவு மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## பாதுகாப்பு...

அமைச்சராக பதவி வகிக்கும் உரிமை 19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலம் இல்லாமல் செய்யப்பட்டுள்ளதாக கல்வியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சர் பதவியை வகிக்கும்போது நேரடியாக செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத காரணத்தினால் ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் சிறந்த உதாரணம்.

பாதுகாப்பு அமைச்சராக நேரடியாக செயற்பட முடியாத காரணத்தினால் இந்த தாக்குதல் நடந்தது.

ஜனாதிபதிக்கு மேல் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆணைக்குழுக்களுக்கே அதிகாரம் உள்ளது. ஆணைக்குழுக்களுக்கு அதிகாரம் கிடைத்துள்ளமை 19ஆவது திருத்தச் சட்டத்தில் நடந்த மிகவும் பயங்கரமான நிலைமை.

இது சம்பந்தமான புரிதல் இல்லாத சிலர் 19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை நீக்குவது மிகப் பெரிய தவறு என்று கருதுகின்றனர் எனவும் ஜி.எல். பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

எது எப்படி இருந்த போதிலும் 19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தில் ஜனாதிபதி எந்த அமைச்சுப் பதவிகளையும் வகிக்க முடியாது என்றாலும் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பொறுப்பின் கீழேயே பாதுகாப்பு அமைச்சு செயற்பட்டு வருகிறது.

இது அரசியலமைப்புச் சட்டத்தை மீறும் செயல் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க அண்மையில் பாராளுமன்றத்தில் சுட்டிக் காட்டியிருந்தார். (ம-3)

## என்னால் வழங்க...

இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

அண்மையில் ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட பல்வேறு நியமனங்களுக்கு எதிராக பல்வேறு அழுத்தங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்நியமனங்கள் அனைத்தும் எமது நாட்டு இறையாண்மை, தேசிய பாதுகாப்பு மற்றும் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தை செயற்படுத்துவதற்காக மிகவும் சிறந்த விடயங்களை கருத்திற் கொண்டே வழங்கப்பட்டுள்ளன.

அதே போன்று நியமிக்கப்பட்டவர்களின் தேசப்பற்று, தகைமைகள் மற்றும் பின்புலம் பரீட்சிக்கப்பட்டு சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் அரசாங்கத்தின் கொள்கையை சிறப்பாக முன்னெடுப்பதற்கு இயலுமான வகையில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஆழமாக சிந்தித்து நியமிக்கப்பட்ட நியமனங்களை மாற்றி, பல்வேறு அழுத்தங்களின் காரணத்தினால் வேறு ஒருவரை அதற்காக நியமிப்பதற்கு எவ்வித எதிர்பார்ப்பும் தம்மிடம் இல்லை என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

அதனால் சில நியமனங்களுக்கு எதிராக அதனை மாற்றுமாறு தமக்கு அல்லது அரசாங்கத்திற்கு அழுத்தங்கள் கொடுக்க வேண்டாமென ஜனாதிபதி அனைவரிடமும் கேட்டுக் கொண்டார்.

நியமனங்களுக்கு எதிரான கருத்துக்கள் மற்றும் எண்ணங்களை முன்வைப்பதன் மூலம் தெரிவு செய்யப்பட்ட நபர்களுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள கடமைகள், விடயதானங்களை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு முடியாமல் போவதோடு மட்டுமன்றி சமுதாயத்தில் அந்நபர்கள் பற்றி தப்பான எண்ணங்கள் ஏற்படுவதினால் அரசாங்கம் முன்னெடுத்து வருகின்ற வேலைத்திட்டங்களும் வீணடிக்கப்படுமென்பதே தனது கருத்தாகுமென ஜனாதிபதி குறிப்பிட்டார். (ம-3)

## 90.8 மில்லி...

தீபன் தெரிவித்தார்.

"இலங்கையைச் சூழவுள்ள கீழ் வளிமண்டலத்தில் ஏற்பட்ட தளம்பல் காரணமாக தற்போது ஏற்பட்டுள்ள மழைவீழ்ச்சியானது மேலும் 18 மணித்தியாலங்களுக்கு தொடரலாம் என வளிமண்டலவியல் திணைக்களத்தினால் எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் கடந்த இரண்டு நாட்களில் மட்டும் 90.8 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. நேற்று முன்தினம் காலை 8.30 மணியிலிருந்து நேற்றுக் காலை 8.30 மணி வரை 55.4 மில்லி மீற்றர் மழையும் நேற்றுக் காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல் 2.30 மணி வரையில் 22.7 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளது.

அச்சுவேலிப் பகுதியில் 92.9 மில்லி மீற்றர் அதிகூடிய மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. அதேபோல் தெல்லிப்பழைப் பிரதேசத்தில் 84.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதி வாகியுள்ளது.

இந்த வருடம் கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து நேற்று வரை யாழ். மாவட்டத்தில் 343.9 மில்லி மீற்றர் மழை பதிவாகியுள்ளது.

நாட்டைச் சூழவுள்ள கடற் பகுதிகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

வடக்கு பகுதியில் கடற்றொழிலில் ஈடுபடுவோர் மிக அவதானமாக செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## அரச...

துக் கொள்ளப்பட்டனர்.

அவர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

நியமனங்களை வழங்குவதற்காக 25 நிமிடங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட எளிமையான நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சுபீட்சமான எதிர்காலத்தை உருவாக்கும் கொள்கைக்கு ஏற்ப, 60 ஆயிரம் பட்டதாரிகளுக்கு அரச தொழில் வாய்ப்புக்களை வழங்கும் திட்டத்தை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

அதற்காக நேற்று இணைத்துக் கொள்ளப்பட்டவர்களில் 38,760 பெண்களும்அடங்குகின்றனர்.

தலைமைத்துவ மற்றும் திறன் விருத்தி பயிற்சியின் பின்னர் இவர்கள் பல்வேறு துறைகளில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். (ம-3)

## 20ஆவது திருத்...

19ஆவது திருத்தத்தில் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்தின் பதவிக் காலம் 5 ஆண்டுகளாக வரையறுக்கப்பட்டது.

அத்துடன் ஒருவர் இரண்டு தடவைக்கு மேல் ஜனாதிபதி பதவி வகிக்க முடியாது என்றும் மட்டுப்பாடு விதிக்கப்பட்டன. தகவலறியும் உரிமைச் சட்டம் வலுப்படுத்தப்பட்டது.

இவ்விடயங்களை அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தில் முழுமையாக செயற்படுத்துமாறு ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளதற்கு அமைய அவற்றில் எவ்வித மாற்றங்களும் ஏற்படுத்தப்படவில்லை.

சட்ட மூல வரைபு தொடர்பான உப குழுவினரால் தயாரிக்கப்பட்ட சட்ட மூல வரைபு சட்டமா அதிபருக்கு சமர்ப்பிக்கப்பட்டு சட்ட மூலவரைபு பரிசீலனை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## மேலும் 9...

டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 3101 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

சேவன
திகதி 02/09/2020
சீட்டிழுப்பு இலக்கம் 292
D 26 49 55 66
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

மஹஜன சம்பத
திகதி 2020/09/02
சீட்டிழுப்பு இலக்கம் 4233
ஆங்கில எழுத்து / வெல்லப்பட்ட இலக்கங்கள்
K 6 5 9 5 1 0
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 02-09-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2528
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
E 33 49 55 66
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 02-09-2020 சீட்டிழுப்பு இலக்கம் 1051
வெற்றி இலக்கங்கள்
K 6 4 8 3 9 6
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 02/09/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0600
வெற்றி எழுத்து / சுப்பர் இலக்க / வெற்றி இலக்கங்கள்
O 02 23 36 51 67

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1686
சீட்டிழுப்பு திகதி 02/09/2020
வெற்றி இலக்கங்கள்
33 43 49 70 ஆங்கில எழுத்து O
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 5,307,1692
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1029
வர்ணம்: இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.09.02
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 66,309,595/-
வெற்றி இலக்கங்கள் 02 14 35 37 ஆங்கில எழுத்து R
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 9183
ரூ. 100/- பரிசுக்கான விசேட இலக்கம் 272
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2020.09.02
சீட்டிழுப்பு இல.: 3359
வர்ணம்: ஊதா
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 38,906,771.50
வெற்றி இலக்கங்கள் 10 60 71 74 ஆங்கில எழுத்து A
ரூ.500/- பரிசுக்கான விசேட இலக்கம் 4392
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1203
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 02.09.2020
தினம் புதன்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
W 13 43 44 64
53,801,424.40
SUPER 500 விசேட இலக்கம் 4 4 8 6

ராசி அதிர்ஷ்டம்
திகதி 02.09.2020
வெற்றி வாரம் 2910
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள்
01 49 55 61
துலாம்
ரூ.500 பரிசுக்குரிய 4230
ரூ.100 பரிசுக்குரிய 349
விசேட இல.
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,337,700
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
www.dlb.lk
தொ. பே.: 0112 333 546/47
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

# உடனடி வேலைவாய்ப்பு

## பிரபல விளம்பர நிறுவனம் ஒன்றிற்கு

விளம்பரப் பலகைகள்

அலுவலக தளபாடங்கள் (Office Furnitures)

தயாரிக்கத் தெரிந்தவர்கள் (குறைந்தது 1 வருட அனுபவம்)
மற்றும் உதவியாளர்கள் **வேலைக்குத் தேவை**

விண்ணப்பிக்க விருப்பமுடையவர்கள்
இத் தொலைபேசி எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

அனுபவத்திற்கேற்ப சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

வேலைத்தளம் : கோண்டாவில்
077 260 7614

(3771)

# A/L 2020 Geography Seminar

முதலாவது
**06.09.2020 - ஞாயிற்றுக்கிழமை**

- பரீட்சை விடைத்தாள்கள் புள்ளி வழங்கும் திட்டத்திற்கு அமைவாக மதிப்பீடு செய்து ஒவ்வொரு மாணவர்களுக்குமான கலந்துரையாடலுடன் விளக்கமளிக்கப்படும்.
- பயிற்சிகள், விளக்கக் குறிப்புக்கள் வழங்கப்படும்.
- ஏனைய பரீட்சைகள், Seminar தொடர்பாக 06.09.2020 அன்று அறியத்தரப்படும்.

**P.S குமரன்** B.A (Hons), M.Ed.
பொருளியற் கல்லூரி, யாழ்ப்பாணம்.

பலரின் வேண்டுகோளினால் இம்முறை பிற மாணவர்களுக்கும் அனுமதி வழங்கப்படுகிறது. முன்பதிவு செய்யவும். (C-206)

077 611 6453

# Techno World

## தொழில்நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.

## A/L 2020 தொழில்நுட்ப பிரிவு

### மாபெரும் விசேட செயலமர்வு

காலை 8 - மதியம் 2.30 · 07.09.2020 முதல்

| திகதி | பாடங்கள் |
|---|---|
| 7-9,12-15, 25-27 | தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் |
| 10-14,26-27 | பொறியியல் தொழில்நுட்பவியல்<br>உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் |
| 18-21 | I.C.T, விவசாய விஞ்ஞானம், புவியியல்,<br>ஊடகக்கல்வி, கணிதம்(7),சித்திரம் |

### ஆரம்பம் 07.09.2020 (8am - 2.30pm)

**மாவட்ட முதல்நிலை பெற்ற மாணவர்கள்**

**2019**

| | |
|---|---|
| மதுசாளினி | (Kili) 01(BT) |
| யோகதீபன் | (JAF) 01(BT) |
| யசிதா | (MULLAI) 01(BT) |
| அருள்ராஜ் | (MAN) 01(ET) |
| தனுஜன் | (MULLAI) 02(BT) |
| தரசன் | (KILI) 02(BT) |
| ஜீவரதன் | (MULLAI) 02(ET) |
| பிரியங்கன் | (KILI) 02(ET) |
| தக்சயன் | (MULLAI) 03(ET) |
| நிலவன் | (KILI) 03(BT) |
| ஜந்துசன் | (JAF) 03(ET) |
| லாவண்ஜா | (JAF) 04(BT) |

**2018**

| | |
|---|---|
| கலக்சிகா | (JAF) 01(BT) |
| ரஜிதா | (MULLAI) 01(BT) |
| விதுர்சன் | (KILI) 01(BT) |

**2017**

| | |
|---|---|
| கேசனா | 01(BT) |
| தமிழின்யன் | 01(ET) |
| மேரிகனிஸ்ரா | 02(BT) |
| சரண்சனா | 03(BT) |
| கோகுலன் | 03(ET) |

(C-196)

தொடர்புகளுக்கு : 0770175346, 0771703549

## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

தகுதி - 30 வயதிற்கு உட்பட்டவர்கள் - O/L, A/L எடுத்தவர்கள் விரும்பத்தக்கது (இருபாலாரும்)



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் **V2 TRAVELS**

எமது கிளைகள்

கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, கொடிகாமம், கோப்பாய், சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர்

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -10'000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்
- ஆரம்ப சம்பளம் -15'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0768226243
v2vacancies@gmail.com

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

வழமை போல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி
- நெல்லியடி • கொடிகாமம் • திருகோணமலை
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • மானிப்பாய்
- மருதங்கேணி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

(C-126)

0768226240

## புதுக்குடியிருப்பு ப.நோ.கூ. சங்கம் (வ.து)

### கிளை பொதுச்சபைக் கூட்டம்

05.09.2020ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு சங்கத்தின் கிளைகளின் புதிய நிர்வாக சபைத் தெரிவு கிளைகளின் பிரிவுகளிலுள்ள பாடசாலைகளில் இடம்பெற உள்ளது. இதற்கமைய இக் கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்க உரித்துள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ் அறிவித்தல் கிடைக்கப்பெறா விடினும் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட கிளைகளுக்கு சமுகமளித்து கிளைக்குழுவை தெரிவு செய்ய உதவுவதுடன் இக்கூட்டத்திற்குரிய நிறைவெண் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கில் ஒரு (1/4) பங்கினர் அல்லது 25 பேர் அதில் எது குறைவோ அத்தொகையாகும். எனவே கிளை பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்து தங்களின் ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தி கூட்டுறவுக் கிளைகளை பலப்படுத்த புதிய நிர்வாக சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

செயலாளர்
புதுக்குடியிருப்பு ப.நோ.கூ. சங்கம் (வ.து)
புதுக்குடியிருப்பு

(C-222)

## காப்புறுதித் துறையில் வாழ்க்கையை மாற்றும் ஒரு கூட்டிணைவை ஆரம்பித்திடுவோம்

தொடர்ந்து 7 வருடங்கள் வேலை செய்வதற்கு மிகச்சிறந்த இடம் என்ற (G.P.W) விருதினைப் பெற்ற யூனியன் அஷ்யூரன்ஸ் இருந்து தொழில்வாய்ப்புகள் யாழ்.பிராந்தியம்


- முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி
- உதவி முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி

**முகாமையாளர் – வியாபார அபிவிருத்தி**

- க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
- அடிப்படை கொடுப்பனவு 40,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்

**உதவி முகாமையாளர் – வியாபார அபிவிருத்தி**

- க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
- அடிப்படை கொடுப்பனவு 30,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்



உங்களது சுயவிபரக் கோவையினை அல்லது விண்ணப்பங்களை 12.09.2020க்கு முன்னர் rayman2017r@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

218, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

UNION ASSURANCE
A JOHN KEELLS COMPANY

(3769)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.09.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.